

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 100 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 03 – ஞாயிற்றுக்கிழமை 19 நவம்பர் 2023 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 100: Thiruvalluvar Year - 2054 - Karthigai 03 - Sunday 19 November 2023 - Dak 8 Pages ₹ 5.00


## சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல்

# ஆளுநர் சட்டமன்றத்தை அவமதிக்கிறார்!

## சட்டப்பேரவையில் தனித் தீர்மானம் கொண்டு வந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்க உரை!

**சென்னை, நவ. 19 -**

**“சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தராமல் ஆளுநர் சட்டமன்றத்தை அவமதிக்கிறார்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப்பேரவையில் தனித் தீர்மானம் கொண்டு வந்து விளக்க உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2023) சட்டமன்றப் பேரவையில், ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறு ஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை வருமாறு:-

“மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை” என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாக சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல்நலனைவிட இந்த மாநிலத்து மக்கள் நலன், தாய்த்தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த மாண்புமிகு சட்டப்பேரவை நலன் தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்த சட்டமன்றத்தை தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால், இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்தி விடும் என்ற அச்சத்துடன் தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

**கலைஞரின் நெறி நின்று ஆட்சி நடத்தி வருகிறோம்!**

இங்கே படமாக மட்டுமல்ல; பாடமாக நின்று கொண்டு இருக்கிறார் வான்புகழ் வள்ளுவர் அவர்கள்.

**முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**இறை என்று வைக்கப்படும்**

**என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியவர் அவர்தான்.**

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான் என்று இதற்கு உரை எழுதினார் எங்களையெல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள். ஆளாக்கிய தலைவரின் நெறி நின்றுதான் ஆட்சி நடத்தி வருகிறோம்.

அதற்கு தடைக்கற்கள் விழுமானால், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் வழியில், ‘தடந்தோள்கள் உண்டு’ என்பதையும் மெய்ப்பித்துக் காட்டி வருகிறோம்.

**மக்களாட்சி மாண்பை உருவாக்கும் தமிழ்நாடு சட்டமன்றம்!**

இந்தியாவில் மக்களாட்சி மாண்பை உருவாக்கும் சட்டமன்றமாக முதன்முதலாக எழுந்த சட்டமன்றம் நமது தமிழ்நாட்டு சட்டமன்றம்.

இந்திய விடுதலைக்கு முன்பும், பின்புமாக ஒரு நூற்றாண்டு காலமாக பல கட்சிகள், பல முதலமைச்சர்கள், பல நூறு உறுப்பினர்களைக் கண்ட தமிழ்நாடு சட்டமன்றம், ஜனநாயக விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவதுடன், சமூக நீதியின் அடிப்படையில் சமூகநலத் திட்டங்களை அனைத்துத்தரப்பு மக்களின் நலன் கருதிச் செயல்படுத்துவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது என்றால், அது மிகையல்ல!





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.11.2023) சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களால் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பெற்ற சட்டமுன்வடிவுகளை மீண்டும் சட்டப்பேரவையில் மறுஆய்வு செய்து நிறைவேற்றிடும் அரசினர் தனித்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

இரட்டையாட்சி முறைப்படி தேர்தல்கள் நடந்து, 1920ஆம் ஆண்டு இங்கு அமைந்த சட்டமன்றம்தான், ஒரு சட்டமன்றம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற நெறிமுறை நடைமுறை மரபுகளை உருவாக்கியதாக அமைந்திருந்தது.

இது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்வையிட இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இருந்தெல்லாம் இங்கு பார்வையாளர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

இத்தகைய சிறப்பினைப் பெற்ற, மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்தான், நூறு ஆண்டுகாலமாக எத்தனையோ சமூக அரசியல் பொருளாதார சமதர்ம சமூகநீதிச் சட்டங்களையும் திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம்.

**பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சி!**

இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் தலையாய மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லத் தக்க வகையில் சிறப்பான மக்கள் நலத்திட்டங்களை உருவாக்கி மாநிலத்தை வளர்த்தெடுத்து இருக்கிறோம். இன்று நாம் காணும் வளர்ச்சி என்பது நமது தலைவர்களால், அவர்கள் உருவாக்கிக் கொடுத்த சட்டங்களால் திட்டங்களால் வந்தவை ஆகும்.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருகிறோம்.

சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் காத்தல் ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு, எண்ணற்ற மக்கள் நலன்சார்ந்த திட்டங்களை இதே சட்டமன்றத்தில் அறிவித்துச் செயல்படுத்தி வருவதை இன்றைய தினம் அனைத்துத் தரப்பினரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**இந்தியாவுக்கே வழிகாட்டும் திட்டங்கள்!**

தமிழ்நாட்டுக்கான திட்டங்கள் தமிழ்நாட்டை வளப்படுத்தும் திட்டங்களாக மட்டுமல்ல; இந்தியாவுக்கான வழிகாட்டும் திட்டங்களாக அமைந்து வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையைக் கெடுக்கும் வகையில் என்றுகூடச் சொல்ல மாட்டேன்; தடுக்கும் வகையில் சில இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

*** நிதி நெருக்கடி**

*** ஒன்றிய அரசின் சில இடையூறுகள்**

இவை மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை எங்களால் செய்து காட்ட முடியும் என்று இதே மாமன்றத்தில் ஓராண்டுக்கு முன்னதாக நான் குறிப்பிட்டதையும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

**சிறப்புக்கூட்டம் ஏன்?**

இடையூறுகள் என்று நான் சொன்னதன் விளைவாகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியதாக உள்ளது.

பொதுவாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகளுக்காகவும், முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்படுவது வழக்கம்.

அதேபோல் நாம் இன்றைக்கு கூட்டியிருக்கும் சிறப்புக் கூட்டம், அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியும் கூட்டப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

**மக்களாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள்.**

“I withhold assent” **அதாவது, தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளை கடந்த 13.11.2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நாம் இங்கே மீண்டும் நிறைவேற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை மிக்க ஒரு அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநர் அவர்களின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிர்வாகரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம்மந்தப்பட்ட அரசு செயலர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்ட முன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவர்கள் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும்.

10 சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்ட முன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும்! ஜனநாயக விரோதம் ஆகும்! மக்கள் விரோதம் ஆகும்! மனச்சாட்சி விரோதம் ஆகும்! அனைத்திற்கும் மேலாக இந்த சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்!

**நாள்தோறும் தவறான பாடங்களை சொல்லித் தருகிறார்!**

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்றிய அரசிடம் அவருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கான நிதியை வாங்கித் தருவதற்கு முயற்சிக்கலாம்; ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையைப் பெற்றுத்தரலாம்; எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை வாங்கித் தரலாம்; புதிய ரயில்வே திட்டங்களைப் பெற்றுத் தரலாம்; மாநில ஆட்சிக்கும், ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்கலாம். ஆனால், இதில் எதையும் செய்யாமல், மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள்தோறும் யோசித்து யோசித்து செயல்பட்டு வருகிறார்.

**ஆளுநர் பதவிக்கு அழகல்ல!**

அதோடு, தினந்தோறும் யாரையாவது கூட்டிவைத்துக் கொண்டு அவர் வகுப்பு எடுக்கிறார். வகுப்பு எடுக்கட்டும், தவறில்லை. அதில் மொத்தமும் தவறான பாடங்களைச் சொல்லித்தந்து கொண்டு இருக்கிறார்.

விழாக்களுக்குச் செல்கிறார். செல்லட்டும்! ஆனால் விதண்டாவாதக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அரசின் கொள்கைகள் குறித்து பொதுவெளியில் விளக்கம் அளிப்பதும் விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு அல்ல.

தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் திராவிடக் கொள்கை, சமத்துவம், சமூகநீதி,


தொடர்ச்சி 3 ஆம் பக்கம்


## விதண்டாவாதக் கருத்துக்களைச் சொல்லி வருகிறார்!

**தினந்தோறும் யாரையாவது கூட்டிவைத்துக் கொண்டு அவர் வகுப்பு எடுக்கிறார். வகுப்பு எடுக்கட்டும், தவறில்லை. அதில் மொத்தமும் தவறான பாடங்களைச் சொல்லித்தந்து கொண்டு இருக்கிறார். விழாக்களுக்குச் செல்கிறார். செல்லட்டும்! ஆனால் விதண்டாவாதக் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அரசின் கொள்கைகள் குறித்து பொதுவெளியில் விளக்கம் அளிப்பதும் விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு அல்ல.**

## உச்சநீதி மன்றம் ஓங்கி குட்டு வைத்தவுடன் நாடகம் ஆடுகிறார் ஆளுநர்!





இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) உத்திரப்பிரதேச மாநிலம், லக்னோவில் 23.3.2023 முதல் 26.03.2023 வரை நடைபெற்ற 5–வது தேசிய பாரா பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்டு தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் வென்ற 8 வீரர், வீராங்கனைகளுக்கு “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து தலா ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.16 இலட்சத்திற்கான காசோலைகளை ஊக்கத்தொகையாக சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் கலந்துகொண்டனர்.

### வ.உ.சி.யின் பன்முகப்பட்ட

# வாழ்வையும் பணிகளையும் போற்றுவோம்!

## நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, நவ. 19-

“வ.உ.சி.யின் பன்முகப்பட்ட வாழ்வையும் பணிகளையும் போற்றுவோம்” என்று அவரது நினைவு நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளார்.



‘கப்பலோட்டிய தமிழன்’ வ.உ.சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**“மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ” என மகாகவி பாரதி மனம் நொந்து பாடும் அளவுக்குக் கோவைச் சிறையில் கொடுமைக்குள்ளான வீரர் வ.உ.சிதம்பரனாரின் நினைவு நாள்!**

**தன் இளமை, சொத்து, பாரிஸ்டர் பட்டம் என அனைத்தையும் இழந்து வாழ்நாளெல்லாம் இந்திய விடுதலைக்காகப் போராடிய தனிப்பெரும் தியாகசீலராம் கப்பலோட்டிய தமிழரை நன்றிப் பெருக்குடன் நினைவுகூர்வோம்! அவரது பன்முகப்பட்ட வாழ்வையும் பணிகளையும் போற்றுவோம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### சா.ஞானதிரவியம் எம்.பி.- துணைமேயர் ராஜ் முன்னிலை!

# நெல்லையில் வ.உ.சி. திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## டி.பி.எம்.மைதீன்கான் மாலை அணிவித்தனர்!

நெல்லை.நவ.19-

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 87வது நினைவு தினத்தை முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் சார்பில் நெல்லை மாநகராட்சி பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள வ.உ.சிதம்பரனார் மணிமண்டபத்தில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்கள்திருவுருவச்சிலைக்கு மாவட்ட ஆட்சியர் மரு. கார்த்திகேயன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான்ஆகியோர் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், மாநகராட்சி ஆணையாளர் தாக்கரே சுபம் ஞானதேவ் ராவ்,துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

முதலமைச்சர் அவர்கள் வ.உ. சிதம்பரனார் அவர்களின் புகழை போற்றும் வகையில் 14 சிறப்பு அறிவிப்பினை தமிழ்நாடு சட்டப்பேரவையில் கடந்த கூட்டத்தொடரில் அறிவித்துள்ளார்கள். குறிப்பாக வ.உ.சிதம்பரனார் அவர்களின் 150ஆவது ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு பொருட்காட்சி திடலில் அமைந்துள்ள மணிமண்டபம் புனரமைக்கப்பட்டு, அன்னாரது வாழ்க்கை வரலாற்றை பிரதிபலிக்கும் வகையில் ஒலிஒளி காட்சி அமைக்கப்படும் என அறிவித்தார்கள். அதனை தொடர்ந்து ரூபாய் 70 லட்சம் செலவில் புனரமைப்பு பணிகள் முடிக்கப்பட்டு ஒலிஒளி காட்சி அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேலும் ரூபாய் 10 லட்சம் செலவில் இங்கு அமைந்துள்ள நூலகத்திற்கு போட்டி தேர்விற்காக படிக்க வரும் மாணவர்களுக்கு நிழற்குடை, இருக்கைகள்,குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களை சிறப்பிக்கும் வகையில் இந்த அரசு பல்வேறு சிறப்புகளை செய்து வருகிறது.வ.உ. சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை அரசு சார்பில் கடைப்பிடிக்க வேண்டும் என அறிவித்ததன் அடிப்படையில் நேற்று மாவட்ட நிர்வாகம் சார்பில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட அவை தலைவர் முருகன், மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்,தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,இளைஞர் அணி துணை அமைப்பாளர் மீரான்மைதீன்,

மாமன்ற உறுப்பினர் உலகநாதன், கவிஞர் மூர்த்தி, கழக நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கிவைத்த இருசக்கர வாகனப் பேரணி புதுக்கோட்டை மாவட்டத்தை வந்தடைந்தது. இந்தப் பயணத்தை மேற்கொள்ளும் கழக இளைஞர் படைக்கு, புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயலாளர் கே.கே. செல்லப்பாண்டியன் ஆகியோர் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சு.சண்முகம், இளைஞரணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் மு.கலைஞர் கருணாநிதி, இளஞ்சேரன் முத்துச்சாமி, .விளாப்பட்டி சிவா, கந்தர்வக்கோட்டை ஸ்டாலின் , அன்சாரி ஆகியோர் முன்னிலையில், கவிச்சுடர் கவிதைப் பித்தன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, மாவட்ட கழக நிர்வாகிகள் வரவேற்று வாழ்த்துகளை தெரிவித்தனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் - பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் வென்ற

# விளையாட்டு வீரர்களுக்கு ரூ.60.18 இலட்சம் ஊக்கத் தொகை!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ.19-

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து ரூ.60.18 இலட்சம் உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகையினை பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டின் சார்பில் பங்குபெற்று பதக்கங்கள் வென்ற வீரர், வீராங்கனைகளுக்கும், பங்கேற்கவுள்ள வீரர், வீராங்கனைகளுக்கும் வழங்கினார்.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்தி வெளியீடு வருமாறு:-

தாய்லாந்தில் 01.12.2023 முதல் 09.12.2023 வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உலகத்திறன் விளையாட்டுப் போட்டியில் (IWAS THAILAND) தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொள்ளவுள்ள 24 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் மற்றும் சீருடை செலவினம் ஆகியவற்றுக்கான செலவினத் தொகைக்காக “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து ரூ.38.40 இலட்சத்திற்கான காசோலைகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் சீனாவில் 18.10.2023 முதல் 31.10.2023 வரை நடைபெற்ற 19வது ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் வென்ற வீரர் ஆ.குஹன்வசந்த் அவர்களுக்கு ரூ.2.00 இலட்சத்திற்கான காசோலையினையும், உத்திரப்பிரதேசம் மாநிலம், லக்னோவில் 23.03.2023 முதல் 26.03.2023 வரை நடைபெற்ற 5வது தேசிய பாரா பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்துகொண்டு தங்கப் பதக்கங்கள் வென்ற நித்ய்ரீ மற்றும் சிவராஜன் சோலைமலை, வெள்ளிப் பதக்கங்கள் வென்ற ருத்திக் ரகுபதி, சந்தியா விஷ்வநாதன் மற்றும் நவீன் சிவகுமார், வெண்கலப் பதக்கங்கள் வென்ற நீரஜ்குமார் சீனிவாசன், எம்.எஸ்.சுதர்சன் மற்றும் டி. பிரித்விராஜ் ஆகிய 8 வீரர், வீராங்கனைகளுக்கு “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து தலா ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.16 இலட்சத்திற்கான காசோலைகளையும் ஊக்கத் தொகையாக வழங்கினார்.

மேலும், ஆஸ்திரேலியா, மெல்போர்னில் 02.11.2023 முதல் 12.11.2023 வரை நடைபெற்ற ஆசிய ஓசியானியா சாம்பியன்ஷிப் 2023 போட்டியில் கலந்து கொண்ட தமிழ்நாடு செரிப்ரல்பால்சி வீரர்களான பாண்டியராஜன் மற்றும் ஜோஷ்வா ஆண்ட்ரூஸ் ஆகியோருக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக் கட்டணம், உள்ளூர் போக்குவரத்துக் கட்டணம், விசா செலவுகள் ஆகியவற்றுக்கான செலவினத் தொகைக்காக “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை” நிதியிலிருந்து தலா ரூ.1.89 இலட்சத்திற்கான காசோலைகளை உதவித்தொகையாக வழங்கினார்.

இதுவரை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சொந்த நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ.5 இலட்சம் உட்பட மொத்தம் 70 தனியார் கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட பங்களிப்புகள் மூலம் நன்கொடையாக பெறப்பட்ட மொத்தத் தொகை ரூ.21.06 கோடி நிதி “தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை”க்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தமிழ்நாட்டைச் சார்ந்த சுமார் 228 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உதவித் தொகையாகவும், ஊக்கத்தொகையாகவும் ரூ.4.64 கோடி நிதி விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# பா.ஜ.க. ஆட்சி இல்லாத மாநிலங்களில் ஆளுநர்கள் மூலம் ஒன்றிய அரசு குடைச்சல்!

## சட்டப்பேரவையில் முதல்வர் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை ஆகியவை மக்களின் மனங்களில் இருப்பது அவருக்கு ஏற்கவியலாத ஒன்றாக உள்ளது.

பொதுமேடைகளில் அவர் நமது தமிழ்ப்பண்பாடு, இலக்கியம் மற்றும் சமூக அமைப்பிற்கு எதிரான கருத்துகளையும் தெரிவித்து வருகிறார். தெரிவித்துக் கொண்டும் வருகிறார். அவரது அபத்தமான கருத்துகளுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்பு செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகிறார்கள்.

**குடியரசுத் தலைவருக்குக் கடிதம்!**

அவர் தெரிவிக்கும் கருத்துகளை வைத்துப் பார்க்கும்போது, அவருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்குமான பிரச்சினை என்பது நாம் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களில் மட்டுமல்ல; சமூகநீதியாகவும் இருக்கிறது. அதனால்தான் முடிந்தளவு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்.

அவருக்கு முடிந்த வரை அனைத்து வகையிலும் நாம் உணர்த்திக் கொண்டு வருகிறோம். தமிழ்நாடு வளர்ந்திருப்பதை வளர்வதைக் காணப் பொறுக்காத காரணத்தினால்தான் என்னவோ, ஆளுநர் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார் என்று நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

“அரசியல் சட்டத்திற்கு முழுவதும் மாறாக, அரசுடன் ஆளுநர் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். எனவே, அவருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்” என்று மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கடிதம் எழுதப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தியுள்ளார்கள். நானும் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு இப்பிரச்சினை குறித்து கடிதமும் எழுதியிருக்கிறேன். இந்த அனைத்து முயற்சிகளும் எவ்வித பயனும் தராததால் தான், தமிழ்நாடு அரசு மாண்பமை உச்சநீதிமன்றத்தின் கதவுகளை தட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**உச்சநீதி மன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!**

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் அனைத்துக் கோப்புகள், சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட விவரங்களைக் குறிப்பிட்டு, மாண்பமை உச்சநீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது.

தமிழ்நாடு அரசு எடுத்துரைத்த வாதங்களைக் கவனித்துக் கேட்ட மாண்பமை உச்சநீதிமன்றம், ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து தெரிவித்த கருத்துகள், தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு கிடைத்த முதற்கட்ட வெற்றியாகும். இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் இத்தருணத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவசர அவசரமாக 10 சட்டமுன்வடிவுகளுக்கு எவ்வித ஒப்புதலும் வழங்காமல், கடந்த 13.11.2023 அன்று கோப்புகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்குத்தான் முழு அதிகாரமும் முதன்மையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200இன்படி, இந்தச் சட்டமுன்வடிவுகளை மீண்டும் பரிசீலித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கும் அதிகாரம் இந்த மாமன்றத்திற்குத்தான் உள்ளது.

அந்த அடிப்படையில்தான், இந்த 10 சட்டமுன்வடிவுகளும் இன்றைக்கு உங்கள் முன் வைக்கப்பட்டுள்ளது.

**ஆளுநர் என்ற உயர்ந்த பதவியின் மூலம் அரசியல் செய்கிறார்!**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே

## அரசுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிக்கிறார்!

குறிக்கோளாகக் கொண்டு, இந்திய நாடு இதுவரை கண்டிராத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, மக்களின் எண்ணங்களில் இடம் பிடித்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதனை அரசியல் ரீதியாக சகித்து கொள்ள இயலாத சிலர், அரசு நிர்வாகத்தை முடக்கவேண்டும் என்ற நோக்கத்தில் அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளுநர் என்ற உயர்ந்த பதவியின் மூலமாக அரசியல் செய்ய விரும்புகிறார்கள்.

ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும் அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியதுதான் மரபு ஆகும்.

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். இப்போது மாண்பமை உச்சநீதிமன்றம் தலையில் ஓங்கி குட்டு வைத்தவுடன் அவசர அவரமாக கோப்புகளைத் திருப்பி அனுப்புவதும், சில கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் என நாடகம் ஆடுகின்றார் ஆளுநர்.

அவருக்கு தெரிந்ததை அவர் செய்கிறார். செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 200இன்படி அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியபடி, மக்களுக்கும் மனசாட்சிக்கும் மட்டுமே நாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதையும் பதிவு செய்து, பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**அரசினர் தனித் தீர்மானம்**

**“பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வுசெய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 2 சட்டமுன்வடிவுகள், பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 8 சட்டமுன்வடிவுகள் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக உடனுக்குடன் அனுப்பி வைக்கப் பட்ட நிலையில், நெடுநாட்கள் நிலுவையில் வைத்திருந்து, கடந்த 13.11.2023 அன்று எவ்வித காரணமும் குறிப்பிடாமல், ஏற்பிசை அளிப்பதை நிறுத்திவைப்பதாக (I withhold Assent) சட்டமுன்வடிவுகளில் குறிப்பிட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அச்சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பியுள்ளார்கள். காரணம் ஏதும் குறிப்பிடாமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்து, சட்டமுன்வடிவுகளை திருப்பி அனுப்பியுள்ளது ஏற்புடையதல்ல என இப்பேரவை கருதுகிறது.**

**இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 200ன் வரம்புரையின்கீழ், மேற்காணும் சட்ட முன்வடிவுகள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு ஆளுநரின் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதற்கு ஏற்பிசைவு அளித்திட வேண்டும் என்பதை அவை கவனத்தில்கொள்கிறது.**

**மக்கள் விரோதம்**

**10 சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்டமுன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்டவிரோதம் ஆகும்! ஜனநாயக விரோதம் ஆகும்! மக்கள் விரோதம் ஆகும்! மனச்சாட்சி விரோதம் ஆகும்! அனைத்திற்கும் மேலாக இந்த சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்!**

**ஏற்கெனவே பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் 8.1.2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 9.1.2020 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2020);**

**9.1.2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020);**

**பதினாறாவது சட்டமன்றப் பேரவையில்,**

**25.4.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2022);**

**5.5.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10.5.2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2022);**

**9.5.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10.5.2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2022);**

**10.5.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2022);**

**18.10.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 19.10.2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2022);**

**19.10.2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2022);**

**19.4.2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21.4.2023 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2023); மற்றும்**

**20.4.2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21.4.2023 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2023);**

ஆகிய சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 143ன் கீழ் இப்பேரவை மறு ஆய்வு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது எனும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

---

### ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்கள்

# பேரவையில் ஒருமனதாக மீண்டும் நிறைவேற்றம்!

**சென்னை, நவ. 19 -**

**ஆளுநர் திருப்பி அனுப்பிய 10 மசோதாக்களையும் மீண்டும் சட்டப்பேரவையில் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பும் வகையில் முதலமைச்சர் கொண்டு வந்த அரசின் தனித்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

தமிழ்நாடு சட்டப்பேரவையில் அரசினர் தனி தீர்மானத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தாக்கல் செய்தார். அப்போது பேசிய அவர், பதினைந்தாவது சட்டப்பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2 சட்ட முன்வடிவுகள் மற்றும் பதினாறாவது சட்டப்பேரவையில் நிறைவேற்றப் பட்ட 8 சட்ட முன்வடிவுகள் ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார். இந்த மசோதாக்களை நீண்ட நாட்களாக நிலுவையில் வைத்து விட்டு எவ்வித காரணமும் குறிப்பிடாமல், சட்ட முன்வடிவுகளை ஆளுநர் திருப்பி அனுப்பி இருப்பதாகவும், இது ஏற்புடையதல்ல என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

பதினைந்தாவது சட்டமன்றபேரவையில் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக திருத்த சட்டமுன்வடிவு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக திருத்த சட்ட முன்வடிவு மற்றும் பதினாறாவது சட்டமன்ற பேரவையில் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் திருத்த சட்ட முன்வடிவு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கார் சட்டப் பல்கலைக்கழக திருத்த சட்ட முன்வடிவு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக திருத்த சட்ட முன்வடிவு, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக திருத்த சட்டமுன்வடிவு, தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்ட இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, தமிழ் பல்கலைக்கழக சட்ட இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு, தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக திருத்த சட்டமுன்வடிவு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக திருத்த சட்டமுன்வடிவு ஆகிய சட்ட முன்வடிவுகளை மீண்டும் நிறைவேற்றி தர வேண்டும் என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

முதலமைச்சர் தாக்கல் செய்த தீர்மானத்தை ஆதரித்து அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் உரையாற்றினார். இதைத்தொடர்ந்து முதலமைச்சரின் தனித்தீர்மானம் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து ஆளுநர் திருப்பி அனுப்பிய மசோதாக்கள் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

---

### தி.மு.க. சட்டத்திட்டத் திருத்தக்குழு

# மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

*சென்னை, நவ.19-*

தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம் 17.11.2023 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன், எம்.பி. தலைமையில், சட்டதிட்டத் திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் உறுப்பினர்கள் தென்றல் செல்வராஜ், மேலூர் கரு.தியாகராஜன், தஞ்சை சி.இறைவன், சுப.த.சம்பத் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு அரசால் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதாக் களை மாதக்கணக்கில் கிடப்பில் போட்டு, அவற்றை திருப்பி அனுப்பியுள்ள தமிழ்நாடு ஆளுநருக்கு கண்டனம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு, தன் மாநில நலனுக்காகவும் - மக்களின் நலனுக்காகவும் கொண்டு வரப்பட்ட மசோதாக்களை முறைப்படி, சட்டமன்றத்தில் வைத்து, விவாதம் நடத்தி, ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு அரசின் மசோதாக்களை, நியமனம் செய்யப்பட்ட ஒரு ஆளுநர் ஒப்புதல் அளித்திடாமல், வேண்டுமென்றே, பல மாதங்களாக கிடப்பில் போட்டு, மாநில அரசு உச்ச நீதிமன்றத்திற்கு சென்று முறையீடு செய்த பின்னர், அம்மசோதாக்களை அரசுக்கே திருப்பி அனுப்பியிருக்கிற தமிழ்நாடு ஆளுநரின் ஜனநாயக விரோத செயலை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

# சிவகங்கையில் கலைஞர் நூற்றாண்டு இலவச பொது மருத்துவ முகாம்!

### நகர் மன்றத் தலைவர் துரைஆனந்த் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, நவ. 19-*

சிவகங்கை நகராட்சி சார்பில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு சிவகங்கை நகராட்சி, பொது மருத்துவதுறை, வாசன் கண் மருத்துவமனை, அப்பல்லோ மருத்துவமனை இணைந்து இலவச பொது மருத்துவம் சிவகங்கை கோட்டாட்சியர் திருமதி சுகிதா தலைமையில் இளையான்குடி சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் நடைபெற்றது. முகாமினை சிவக நகர் மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் துவக்கி வைத்தார். நகராட்சி ஆணையர் வெங்கட கிருஷ்ணன் வரவேற்று பேசினார்.

இந்த முகாமில் மாவட்ட சுகாதார துணை இயக்குனர் விஜய்சந்திரன், நகர் மன்ற துணை தலைவர் எம். கார் கண்ணன், நகர்மன்ற உறுப்பினர்கள் ஜெயகாந்தன், மதியழகன், நிர்வாகிகள். ஆர்.டி.சேகர், ராஜாசல்புதீன்,ராம்தாஸ், இளைஞரணி ஹரிஹரன் காங்கிரஸ் சார்பில் சண்முக ராஜன் விஜய் தியாகராஜன், மற்றும் ஏராளமானவர்கள் கலந்து கொண்டார்கள். முகாமில் சர்க்கரை நோய் ரத்த அழுத்தம் ,கண் பரிசோதனை, சித்தமருத்துவம் மற்றும் பொது சிகிச்சை அளிக்கப்பட்டது. 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டார்கள்.

இந்த முகாமில் அப்போலோ முதன்மை செயல் அலுவலர் நீலகண்டன், பொது மேலாளர்கள் ஓம் பிரபு, லாவண்யா, மருத்துவர்கள் கோகுல், கிருஷ்ணன் ஹரி கண்மருத்துவர் பிரேம்நாத் ஆகியோர் சிகிச்சை அளித்தார்கள். முகாமில் மாத்திரைகள் மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.



# உயர் பதவிக்கு இழுக்கேற்படுத்திடும் மோடியின் ஆளுநர்கள்!

'ஆளுநர்' (Governor) என்ற சொல்லே மக்களாட்சியின் இலக்கணத்திற்குப் பொருந்தாத ஒன்று. இங்கு மக்கள், தங்கள் பிரதிநிதிகளைக் கொண்டு தங்களைத் தாங்களே ஆள்கிறார்கள். "We the people of India . . . . . . ." என்று தொடங்கும் அரசியலமைப்புச் சாசனத்தின் முகப்புரை இதனை நன்கு விளக்கும். ஆங்கிலேயன் – வேறு நாட்டிலிருந்து வந்து, நம்மை ஆட்சி செய்யச் சிலரை நியமித்தான், அவர்களை "Governor" என்று குறிப்பிட்டான். நாம் யாரையும் 'ஆளுநர்' என்று குறிப்பிடத் தேவையில்லை. ஆனால், அரசியலமைப்புச் சட்டத்தில் அந்தச் சொல் புகுந்துவிட்டது.

ஆளுநர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இன்றைய ஆளுநர்கள் இல்லை. ஆளுநர்கள் பலரும் அப்பட்டமாக அரசமைப்புச் சட்ட விதிகளை மீறியதன் மூலம் அவர்கள் வகிக்கும் உயர் பதவிக்கு இழுக்கேற்படுத்தி வருகின்றனர்.

நேரு அரசியல் நிர்ணய சபையில் பேசும்போது ஆளுநர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது என்பதை கோடிட்டுக் காட்டினார். அவர் அந்த மாநிலத்தின் உள்ளூர் அரசியலில் சம்பந்தப்படாதவராகவும், அந்த மாகாண அரசியலில் அறியப்படாதவராகவும், தீவிர அரசியலில் பங்கெடுக்காதவராகவும், கல்வியாளர் அல்லது பல்வேறு சமூகத் துறைகளில் புகழ்பெற்றவராகவும் இருக்க வேண்டும் என்று நேரு குறிப்பிட்டார்.

ஒன்றிய–மாநில உறவுகள் பற்றி ஆய்வு செய்த சர்க்காரியா குழுவின் பரிந்துரைகள் (1987) ஆளுநர்கள் மீதான விமர்சனம் எதார்த்தமாக இருந்தது.

**சர்க்காரியா குழுவின் பரிந்துரைகள் !**

ஆளுநர்களாக தேர்ந்தெடுக்கப்படுபவர்

1) சில துறைகளில் புகழ்பெற்றவராக, 2) அவர்கள் வெளிமாநிலத்தைச் சேர்ந்தவராக, 3) அந்த மாநில அரசியலில் மிகவும் நெருங்கிய தொடர்பு இல்லாதவராக –(அரசியலில் சம்பந்தப்படாதவராக),4) சமீப காலத்தில் அரசியலில் பெரும் பங்கு வகிக்காதவராக இருக்க வேண்டும் என்று கூறியது.

மேலும் ஒன்றியத்தின் ஆட்சியில் உள்ள கட்சிக்காரராக இருக்கக் கூடாது. ஆளுநர்கள் நியமனம் குறித்து சம்பந்தப்பட்ட மாநில அரசிடம் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் பரிந்துரைத்தது. பூஞ்சி விசாரணைக் குழுவும் நல்ல ஆளுநரின் தேவை பற்றி பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைகள் அனைத்தையுமே உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது.

ஆளுநரின் தனி விருப்புரிமை அதிகாரங்கள் பாரபட்சத்துடன் பயன்படுத்தப்பட்டதையும், ஆளுநர் பணி மென்மேலும் சர்ச்சைக்குரியதாக மாறி வருவதையும் குறிப்பிட்டது. மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு பரிந்துரைத்தல், மசோதாக்களை நிலுவையில் வைத்தல் அல்லது குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்கு அனுப்புதல் ஆகியவற்றில் ஆளுநர்களின் செயல்பாடுகள் மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டது. ஒன்றிய அரசு தனது அரசியல் நலனுக்காக ஆளுநர் பதவியை பயன்படுத்துவதாக விமர்சித்தது. பல ஆளுநர்கள் ஒன்றிய அரசின் ஏஜென்டுகளாக செயல்படுவதாகவும் குறிப்பிட்டது. ஆளுநர்களின் செயல்பாடுகள் ஒன்றிய, மாநிலங்களுக்கு இடையிலான சமநிலையை பாதிப்புக்குள்ளாக்கி விட்டதாகவும் குற்றம் சாட்டியது.

**மோடியின் ஆளுநர்கள்!**

மோடி பிரதமராக பதவி ஏற்றதுமே ஏறக்குறைய அனைத்து மாநில ஆளுநர்களையும் மற்றும் துணை நிலை ஆளுநர்களையும் மாற்றம் செய்தார்.

இடதுசாரிகளின் கோட்டையான திரிபுராவில் தாதகதராய் சமூக வலைத்தளத்தில் இந்துத்துவப் பிரச்சாரம் செய்தார். மோடிக்கு அவர் மிகவும் வேண்டியவர். ஏழு யூனியன் பிரதேசங்களில் புதிதாக துணை நிலை ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். தில்லி சட்டமன்றத் தேர்தலில் தோற்ற முதலமைச்சர் வேட்பாளர் கிரண்பேடி புதுச்சேரி துணைநிலை ஆளுநராக்கப்பட்டார். அனில் வைசால் தான் ஒரு பா.ஜ.க. ஆதரவாளர் என்று ஒத்துக் கொண்டவர். நஜீப் ஜங் பா.ஜ.க. அரசின் கட்டளைப்படி செயல்பட்டார். ஜம்மு காஷ்மீர் ஆளுநர் எம்.என்.வோரா, ஒடிசா ஆளுநர் எஸ்.சி. ஜெமின், நரசிம்மா (ஆந்திரா), கேசரி நாத் திரிபாதி (மே.வ.) மற்றும் கல்யாண் சிங் இவர்களெல்லாம் பா.ஜ.க.வின் தீவிர ஆதரவாளர்கள் ஆவார்கள்,

**ஆளுநர் நியமன நடைமுறையில் மாற்றம் தேவை!**

ஆளுநர்கள் நியமனத்தில் புதிய நடைமுறையை கடைப்பிடிக்கவேண்டும். ஆளுநராக நியமிக்கப்பட உள்ளவர்களை நாடாளுமன்ற, மாநிலங்களவைக்கு வரவழைத்து அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் முழுமையாக விசாரிக்கவேண்டும். அவர்களது பொருத்தப்பாடும், தகுதியின்மையும் அம்பலப்படுத்தப்பட வேண்டும். அரசமைப்புச் சட்டத்தில் இதற்கான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் கருத்துக்களும், பல்வேறு விசாரணைக் குழுக்களின் பரிந்துரைகளும் நாடாளுமன்ற விசாரணைக்கு போதுமானது. மோடியின் சில ஆளுநர் நியமனங்கள் அரசமைப்புச் சட்டத்தை அவமதிப்பதாக உள்ளது. மேகாலயா ஆளுநர் வி.சண்முகநாதன் பலரையும் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கியதாக 'ஷில்லாங்' நாளிதழ் விரிவாக எழுதியது. ஆளுநர் அலுவலகத்தில் பணிபுரிந்த 80 அலுவலர்கள் அவரால் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவித்தது. ஆளுநர் மாளிகையை "இளம்பெண்கள் விடுதியாக" மாற்றினார் என்று அலுவலர்கள் புகார் செய்தனர். இப்படிப்பட்ட நடத்தை உள்ளவர் எப்படி ஆளுநராக நியமனம் செய்யப்பட்டார்? அவர் ஒரு ஆர்.எஸ்.எஸ். உறுப்பினர் என்பதால் தானே!

**பாபு சந்திரசேகர்**
**கண்காணிப்பு பொறியாளர் (ஓய்வு)**



**தேர்தலின் நோக்கமே சிதைக்கப்படுகிறது!**

2017இல் கோவா, மணிப்பூர் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் தனிப்பெரும் கட்சியாக வெற்றி பெற்றாலும் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு ஆளுநர்கள் உதவி செய்தனர். 2020இல் மத்தியப் பிரதேசம், 2022 இல் மகாராஷ்டிரம் என ஆளுநர்கள் உதவி, அதிகார பலத்துடன் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றியது. தேர்தல்கள்தான் இந்தியாவின் பலமாகும். வாக்காளர்களின் மனநிலை, உணர்வு தேர்தலில் வெளிப்படுகிறது. ஆனால் ஆளுநர்களின் செயல்பாட்டால் தேர்தலின் நோக்கமே அடிபட்டுப் போகிறது. சில ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டக் கொள்கைகளை மீறிக் குற்றம் புரிகின்றனர். தொங்கு சட்டமன்றத்தில் முதல்வரை நியமனம் செய்வது முக்கியமான பணியாகும். அவர்களுக்கு ஜனநாயக அடிப்படைகள், மக்களின் தீர்ப்பு பற்றி எல்லாம் அக்கறையில்லை.

**மிகை உணர்ச்சி கொண்ட மோடியின் ஆளுநர்கள்!**

அனைத்து ஆளுநர்களுமே பதற்றமும், மிகை உணர்ச்சி கொண்டவர்களாகவும், அரசியல் சார்புடன் செயல்படுபவர்களாகவும் இருக்கின்றனர். கேரள ஆளுநர் ஆரிப் முகமது கான், மேற்கு வங்க ஆளுநராக இருந்த ஜகதீப் தன்கர் போன்றவர்கள் தங்களது சொந்த அரசுகளுக்கே இடையூறாக செயல்படுகின்றனர்.

சட்டமன்றம் மூலமாக தேர்ந்தெடுக்கப்படும் முதல்வரைப் போல அல்லாது, ஆளுநர் பதவி என்பது நியமனம் செய்யப்படுவதாகும். எனவே ஆட்சியில் உள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ஆளுநர்கள் மதித்து நடக்க வேண்டும். ஆளுநர் மாநில அரசிடம் மேற்கொள்ளும் தகவல் தொடர்பு பரிமாற்றம் விவேகமானதாக, கண்ணியமானதாக, மோதல் போக்கற்றதாக இருக்க வேண்டும். பல்கலைக்கழக வேந்தர் நியமனம் குறித்த சட்டத்தை திருத்தம் செய்ய கேரள மாநில அரசு விரும்பும் போது, ஆளுநர் ஆரிப் பல்வேறு பல்கலைக் கழக துணை வேந்தர்களை பதவி நீக்கம் செய்கிறார்.

ஆளுநர்களுக்கென அரசமைப்புச் சட்டத்தின் படியான நடத்தை நெறிமுறைகளை அரசமைப்புச் சட்டத்தில் சேர்ப்பதற்கான திருத்தம் செய்ய வேண்டும். இன்னும் பல தேவைகள் பற்றி ஆய்வு செய்ய வேண்டும். ஆளுநர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டம் எதிர்பார்த்த அளவுக்கு இன்றைய ஆளுநர்கள் இல்லை அவர்கள் அரசமைப்புச் சட்டத்தை சீர் குலைத்து வருகின்றனர்.

**வரலாற்றில் இந்திய ஆளுநர்கள்!**

பண்டைக்கால இந்தியாவில் இந்துப் பேரரசர்களின் ஆட்சியில் சிற்றரசர்களுக்கு தன்னாட்சி உரிமை இருந்துள்ளது. அக்பர் ஆட்சிக் காலத்தில் முகலாயப் பேரரசு 12 மாகாணங்களாக பிரிக்கப்பட்டு மைய அரசுக்கு கட்டுப்பட்ட மாகாண ஆளுநர்கள் நியமனம் செய்யப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டது. இங்கிலாந்து அரசியின் ஆட்சியில் இந்தியாவை ஆள்வதற்கு கவர்னர் ஜெனரல் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவரது கட்டுப்பாட்டில் பல ஆளுநர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

1952ம் ஆண்டு பொதுத்தேர்தலில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கவர்னர் பிரகாசா அவர்களின் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு தான் அறிஞர் அண்ணா அவர்கள் 1952ம் ஆண்டு ஆட்டுக்குத் தாடி தேவையில்லை. அதே போல ஆளுநரும் தேவையில்லை என முழக்கமிட்டார்.

சுதந்திர இந்தியாவில் மக்களுக்கு எள்ளளவும் பயன்படாத ஒரு ஆடம்பர பதவி உண்டு என்றால் அது ஆளுநர் பதவிதான். ஆளுநர் பதவி என்பது அரசியல் கட்சியின் நியமனம் என ஆகிவிட்டது. ஆளுநர்கள் நாட்டின் நலனுக்காக செயல்படுவதை விட தம்மை ஆளுநராக நியமனம் செய்த அரசியல் கட்சிக்காகப் பணியாற்றுகிறார்கள் என்றார் சி.சுப்பிரமணியம் அவர்கள்.

வயதாகிப் போய் வாழ்ந்து முடிந்த உறுப்பினர்களுக்கான ஆடம்பரமான ஓய்வு இல்லமாக ஆளுநர் மாளிகைகள் மாறி விட்டன என பி.கே. நேரு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**மோடியின் ஆளுநர்கள் நியமனம் ( அனைவரும் BJP)!**

கிரண்பேடி புதுவை ஆளுநர்,
எம்.என். ஹோரா – ஜம்மு காஷ்மீர் ஆளுநர்
எஸ்.சி.ஜெமின்–ஒடிசா ஆளுநர்
கேசரிநாத் திரிபாதி – மேற்கு வங்கம்
கல்யாண்சிங் – இராஜஸ்தான்
ஜக்தீப் தன்கர் – மேற்கு வங்கம்
தற்போதைய துணை குடியரசுத் தலைவர்
அனுசுயா யுகே – மத்திய பிரதேசம்
ஆரிப் முகமதுகான் – கேரளா
பன்வாரிலால் புரோஹித் – பஞ்சாப்
R.N. ரவி – தமிழ்நாடு(BJP ஆதரவாளர்கள்)

2018ம் ஆண்டு துணை வேந்தர் நியமனங்கள் குறித்து ஆளுநர் தமிழக அரசை கலந்து ஆலோசிக்கவில்லை.

**தமிழ்நாட்டு துணை வேந்தர்கள்!**

அம்பேத்கார் பல்கலைக் கழகம் சூரிய நாராயண சாஸ்திரி (ஆந்திரா), அண்ணா பல்கலைக் கழகம் – சூரப்பா (கர்நாடகா),

கலை மற்றும் நுண்கலை பல்கலைக் கழகம் – பரிமளா தேவி, (கேரளா). தன்னிச்சையாக பிற மாநிலத்தைச் சார்ந்தவர்களை நியமனம் செய்தார் என அன்றைய சட்ட அமைச்சர் சி.வி.சண்முகம் 2018ல் இதை கூறியுள்ளார். இது சமூக நீதி தத்துவத்திற்கு விடப்பட்ட சவால்.

**ஒன்றிய பல்கலைக் கழகங்கள்!**

2016ம் ஆண்டுக்கு முன்னர் ஒன்றிய அரசு கட்டுப்பாட்டில் 15 பல்கலைக் கழகங்கள் இருந்தன. இதில் திருவாரூர் பல்கலைக் கழகத்தில் நியமனம் செய்யப்பட்டவர் ஆதித்ய பிரன்ன ராய் (ஒரிசாக்காரர்). தமிழக பல்கலைக் கழகத்திற்கு ஒரு தமிழரை நியமிப்பதே பல்கலைக் கழக வளர்ச்சிக்கு உதவும். 2016ம் ஆண்டுக்குப் பின்னர் ஒன்றிய அரசு 16 புதிய பல்கலைக் கழகங்களை உருவாக்கியது. இதில் ஒருவர் கூட தமிழ்நாட்டை சார்ந்தவர் துணை வேந்தராக நியமனம் செய்யப்படவில்லை.

**மக்கள் உரிமைகளை மறுக்கும் ஆளுநர்கள்!**

தமிழ்நாட்டில் கடந்த காலங்களில் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரம் மாநில அரசுகளிடமே இருந்தது, அரசு பரிந்துரைக்கும் பட்டியலில் இருந்துதான் ஆளுநர் தேர்வு செய்யப்படுவார்கள். கடந்த காலங்களில் ஆளுநர்களே தன்னிச்சையாக துணைவேந்தர்களை நியமிக்கத் தொடங்கினர். இதனைக் கடந்த காலத்தில் அடிபணிந்து ஏற்றுக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் உள்ள 13 பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரங்களை மாநில அரசுக்கே வழங்க வேண்டும் என சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றி அடுத்த நாளே ஆளுநரின் ஒப்புதலுக்கே அனுப்பிவைத்தோம். இந்த மசோதா குஜராத் பல்கலைக்கழகம் 1949, தெலுங்கானாவில் அனைத்து பல்கலைக் கழகச் சட்டம் 1991, கர்நாடகா மாநில பல்கலைக் கழகச் சட்டங்கள் 2000ஐ ஒத்ததாகும். இதனை ஏற்காமல் ஆளுநர் தற்போது 10 பல்கலைக் கழக துணை வேந்தர் நியமன மசோதாக்களையும் திருப்பி அனுப்பியுள்ளார்.

**ஆளுநரின் வரம்பு!**

பிரிவு 200 சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு மசோதாவும் ஆளுநருக்கு அனுப்பப்பட வேண்டும், அதன் பிறகு அவருக்கு 4 விருப்பங்கள் உள்ளன. மசோதாவுக்கு ஒப்புதல் அளித்தல், ஒப்புதலை நிறுத்துதல், மசோதாவை குடியரசுத் தலைவருக்கு ஒதுக்குதல் அல்லது மறுபரிசீலனைக்காக மசோதாவை சட்டமன்றத்திற்குத் திருப்பி அனுப்புதல்.

இவை அனைத்திற்கும் கால அளவு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். கால அளவு இல்லாததால் நிர்வாகம் நிலை குலைந்து விடுகிறது.

**மாநில சுயாட்சி!**

1928ம் ஆண்டு இரட்டை ஆட்சி முறை குறித்து ஆய்வு செய்திட சைமன் கமிஷன் சென்னை வந்தது. அப்போது நீதிக்கட்சி இரட்டை ஆட்சிமுறை வேண்டாம் என கூறியது. மேலும், மாநிலத்திற்குள் இராணுவமே பிரவேசிக்க வேண்டும் என்றாலும் அமைச்சரவையின் அனுமதி பெற்றுத்தான் வர வேண்டும் எனக் கோரியது,. மாநில சுயாட்சியின் உச்சமாகத்தான் அன்றைக்கு நீதிக்கட்சி கோரியது.

1969ம் ஆண்டின் "ஹோம் ரூல்" (Home Rule) வார இதழில் அறிஞர் அண்ணா, "தம்பிக்கு" எழுதிய கடிதத்தில், "அன்புத் தம்பி! பதவிப் பித்து பிடித்துத் திரிபவனல்ல நான், வெற்றுத் தாளில் கூட்டாட்சி சார்புடையது எனக் கூறி, நடைமுறையில் மத்திய அரசுக்கு மென்மேலும் அதிகாரங்களைக் குவித்துக் கொண்டிருக்கிற (நமது) அரசியல் சட்டத்தின் கீழியங்கும் ஒரு மாநிலத்திற்கு முதலமைச்சர் என்பதில் நான் சிறிதும் மகிழ்ச்சி அடையவில்லை"

19.08.1969 அன்று தமிழகச் சட்டமன்றத்தில் மத்திய, மாநில அதிகாரங்கள் குறித்து பரிந்துரைகள் வழங்கிட உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி பி.வி.இராஜமன்னார் தலைமையில் சென்னை பல்கலைக்கழக துணை வேந்தர் ஏ. இலட்சுமண சாமி முதலியார், நீதிபதி பி.சந்திரா ரெட்டி மூவர் கொண்ட குழுவை முதல்வர் கலைஞர் நியமனம் செய்தார். இவர்கள் சமர்ப்பித்த அறிக்கை 16.04.1975ல் சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும்

# அரசின் நடவடிக்கையில் அரசியல் செய்ய பழனிசாமி அறிக்கை!

## அமைச்சர் எ.வ.வேலு கண்டனம்!



*திருவண்ணாமலை, நவ. 19-*

திருவண்ணாமலையில் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு :

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு பகுதியில் சிப்காட் அமைக்க நிலம் எடுப்பதற்கு 3 கட்டங்களாக பணிகள் நடைபெற்றதாகவும்,

முதற்கட்டமாக 622 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதாகவும், அந்த சமயத்தில் அயல் நாட்டு தொழிற்சாலை உட்பட 13 தொழிற்சாலைகள் சிப்காட் பகுதிக்கு வந்ததாகவும், ஆரணி செய்யாறு வந்தவாசி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

**இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!**

இரண்டாவது கட்டமாக 1860 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் திராவிட மாடல் ஆட்சியில் 55 தொழிற்சாலைகள் அந்த பகுதிக்கு வர உள்ளதாகவும் கூறினார்.

மூன்றாவது கட்டமாக 1200 ஏக்கர் எடுப்பதற்காக மேல்மா, தேத்துறை, குரும்பூர், நெடுங்கல், இளநீர்குன்றம், உள்ளிட்ட 9 கிராமங்களிலும் அரசின் சார்பாக விவசாயிகள் இடம் கருத்து கேட்பு கூட்டம், விளக்க கூட்டங்கள் பலமுறை போடப்பட்டதாகவும் கூறினார்.

குறிப்பாக இந்த 9 கிராமங்களில் 1881 விவசாயிகளிடமிருந்து நிலம் எடுக்க இருந்ததாகவும் அதில் 239 விவசாயிகள் மட்டுமே ஆட்சேபனை தெரிவித்தார்கள் என்றும் கூறினார். தொழிற்சாலைக்காக விவசாயியிடமிருந்து நிலம் எடுக்கப்பட்டால் மார்க்கெட் மதிப்பை விட இரண்டரை பங்கு மதிப்பு அதிகமாக தமிழ்நாடு அரசு வழங்குவதாகவும் கூறினார்.

விவசாயிகளுக்கு இரண்டரை மடங்கு அதிகமாக பணம் கொடுப்பது எதற்காக என்றால் விவசாயிகள் அந்த பணத்தைப் பெற்று வேறு ஒரு இடத்தில் நிலம் வாங்கி தங்களது பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காகவே அரசு மார்க்கெட் மதிப்பை விட அதிக மதிப்பு கொடுப்பதாகவும் அவர் கூறினார்.

விவசாயிகளை பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்றுவது தான் அரசின் நோக்கம் என்றும், அதே நேரத்தில் தொழிற்சாலைகளை உருவாக்கினால் தான் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி தர முடியும் என்பதால் தான் தமிழ்நாடு முதல்வர் வெளிநாட்டு முதலீடுகளை தமிழ்நாட்டில் கொண்டுவர முயற்சித்து வருகிறார் என்றார்.

தொழிற்சாலையை வானத்திலோ, கடலிலோ கட்ட முடியாது என்றும் நிலத்தில் தான் கட்ட முடியும் என்று கூறிய அவர், நமது மாவட்டத்தில் இளைஞர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு உருவாக்கி தர வேண்டும் என்ற நமது கோரிக்கையை தான் அரசு செயல்படுத்த முன் வந்ததாகவும் கூறியவர்.

**சிலரின் தூண்டுதலினால் போராட்டம்!**

ஆனால் இந்த சிப்காட் விவகாரத்தில் ஒரு சிலரின் தூண்டுதலின் அடிப்படையில் தொடர்ச்சியாக 125 நாட்களாக போராட்டங்கள் நடைபெற்றது சுட்டிக் காட்டி அவர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இருந்து அருள் என்பவர் மக்களை தூண்டுவதற்காக தினம்தோறும் வந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியதாகவும் குற்றம் சாட்டியவர், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள எம்பி, எம்எல்ஏக்களும் விவசாயிகள்தான் நாங்கள் விவசாயிகளை காப்பாற்ற மாட்டோமா என்று கேள்வி எழுப்பிய அவர்,

விவசாய நிலம் முக்கியம் என்றும் அதை மறுக்கவில்லை அதே வேளையில் விவசாய அரிசி நிலத்தில் 5% தான் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக பாதிக்கப்படுவதாக கூறும் 9 கிராமங்களில் மட்டும் நான்காயிரம் இளைஞர்கள் சிப்காட்டில் பணி புரிந்துவருவதாகவும் கூறினார்.

இளைஞர்களுக்கு மற்றும் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக் கூடாது, அரசு எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்ற அடிப்படையில் கிராம மக்களை சிலர் தூண்டுவதாக குற்றம் சாட்டிய அமைச்சர், சிறப்பாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசை குறை செல்வதற்காக மட்டுமே சிலரின் தூண்டுதலின் பேரில் இச்செயல் நடைபெற்றதாகவும் விவசாயிகளை வஞ்சிப்பதோ விவசாயிகளின் நிலத்தை அபகரிப்பதோ அரசின் நோக்கம் அல்ல என திட்டவட்டமாக கூறினார். தொடர்ந்து பேசிய அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் இருந்த போதிலும் 9 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு இருப்பது குறித்து தான் செய்தித்தாளில் படித்து தெரிந்து கொண்டதாகவும், குறிப்பாக கடந்த இரண்டு தினங்களாக அரசு பணிக்காக வெளியூர் சென்றிருந்ததாகவும் விளக்கம் அளித்த அவர், கைது செய்யப்பட்டுள்ளவர்களின் குடும்பத்தார்கள் தன்னை சந்தித்து, சிலரின் தூண்டுதலின் பேரில் தங்கள் குடும்ப உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், குண்டர் தடுப்புச் சட்டத்தில் இருந்து தங்களது குடும்ப உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும் என்று மேடம் மனு அளித்துள்ளதாகவும் அதனை நேரடியாக தமிழ்நாடு முதல்வரிடம் கொடுத்து குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கி கூறி அதனை பரிசீலித்து நல்ல தீர்வை எடுக்க வேண்டும் என சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் நானும் தமிழ்நாடு முதல்வரிடம் கோரிக்கை வைப்பேன் என்று உறுதியளித்தார்.

**எடப்பாடி பழனிசாமியால் முடியாததை தி.மு.க. அரசு செய்தது!**

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி செய்யாறு பகுதியில் சிப்காட் கொண்டு வருவதற்காக அரசாணை வெளியிட்டதை நினைவுபடுத்தி பேசிய அவர், அ.தி.மு.க. ஆட்சியில் செய்யாததை தி.மு.க. செய்வதற்காக முன்னெடுத்துள்ளதாகவும், தி.மு.க. ஆட்சியில் அரசாணை வெளியிட்டு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை கொடுக்கலாம் என அவர்களும் நினைத்திருக்கலாம் ஆனால் அவர்களால் செய்ய முடியாததை திமுக ஆட்சிக்கு வந்த பிறகு செய்வதற்காக கையில் எடுத்ததை சுட்டிக்காட்டி அவர், அ.தி.மு.க. ஆட்சியில் செய்ய முடியாததை தி.மு.க. செய்ய முயற்சிக்கும் பொழுது, செய்ய முடியாத சூழலால் எடப்பாடி ஆத்திரப்படுவதாகவும், திமுக ஆட்சியை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் அறிக்கையை வெளியிட்டதாகவும் கூறிய அவர், அரசியல் செய்வதற்காக எடப்பாடி அறிக்கை வெளியிட்டுள்ளார் என்றும் கூறினார்.

விவசாய சங்கத்தைச் சேர்ந்த சிலர் ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளதாக கூறியுள்ளனரே என்று செய்தியாளர்களின் கேள்விக்கு பதில் அளித்த அவர் திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறும் பொழுது அதிமுகவிற்கு ஆதரவாக இருக்கும் விவசாயி மணிகண்டன் தான் கைதட்டி வரவேற்றார் என்றும் கூறினார்.

---

கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும்

# மாநில அளவிலான பள்ளி - கல்லூரி மாணவர்களுக்கு பேச்சு - கட்டுரைப் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

*கடலூர், நவ. 19-*

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு மற்றும் கட்டுரை போட்டிகள் நடை பெறுகிறது என மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

கழக தலைவர் - முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி கழக இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி கடலூர் மேற்கு மாவட்ட மாணவரணி நடத்தும் மாநில அளவிலான பள்ளி மற்றும் கல்லூரி மாணவ - மாணவிகளுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகள் 25.11.2023 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் நடைபெறுகிறது.

அதுசமயம் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் அனைவரும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவச் செல்வங்களை கலந்துகொள்ள செய்து விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பொன்னாப்பூர் கீழ்பாதி **பொ.செகதீசன்**

**நவம்பர் 19 (1980)**



பேரறிஞர் அண்ணா,
முத்தமிழறிஞர் கலைஞர்
ஆகியோரின்மீது கொண்ட
தீவிரப் பற்றினால், கழகம்
தொடங்கிய காலத்திலிருந்து
தீவிரமாக கழகப் பணியாற்றியவர்.

திராவிடநாடு, முரசொலி,
நம்நாடு, மாலைமணி ஆகிய கழக
இதழ்களை வாங்கி, அதனை
பொதுமக்களுக்கும்,
தோழர்களுக்கு வழங்கி கழக
கொள்கைகளை மக்களிடம்
கொண்டு சேர்த்தவர்.

ஒரத்தநாடு,
பொன்னாப்பூர் கீழ்பாதி கிளைக்
கழகச் செயலாளராகவும், அவைத்
தலைவராகவும், ஒருங்கிணைந்த
தஞ்சை மாவட்டக் கழகப்
பிரதிநிதியாகவும் பொறுப்பு
வகித்தவர்.

1952 முதல் 1978 வரை
தொடர்ந்து ஊராட்சி மன்றத்
தலைவர் பதவி வகித்து அப்பகுதி
மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.11.2023) பிலிப்பைன்ஸ் நாட்டில் 08.11.2023 முதல் 12.11.2023 வரை நடைபெற்ற முதியோருக்கான 22வது ஆசிய மாஸ்டர் தடகளப் போட்டியில் தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொண்டு பதக்கங்கள் வென்ற சென்னை மாவட்டத்தைச் சார்ந்த வீரர், வீராங்கனைகள் முகாம் அலுவலகத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ் திரையுலகம் சார்பில் நடைபெறவுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர்100 விழாவிற்கு நேரில் வந்து சிறப்பிக்குமாறு சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களை தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.ராமசாமி, செயலாளர் ஆர்.ராதாகிருஷ்ணன், நடிகர் சங்க பொருளாளர் கார்த்தி, துணைத் தலைவர் பூச்சி எஸ். முருகன் ஆகியோர் விழா குழு சார்பில் நேரில் சென்று அழைத்தனர்.

### செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க எதிரான போராட்டத்தில்

# கைதான 6 பேரின் குண்டர் தடுப்புச் சட்டம் ரத்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, நவ. 19–

செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிரான வன்முறைப் போராட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 6 பேர் மீது போடப்பட்ட குண்டர் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டத்தில் முதற்கட்டமாக 645 ஹெக்டேர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா துவங்கப்பட்டது. தற்போது, இதில் 13 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 27,432 நபர்கள் நேரடியாகவும், 75,000 நபர்கள் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெற்று வருகின்றனர்.

இதே பகுதியில் இரண்டாம் கட்டமாக 2300 ஹெக்டேர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா உருவாக்கப்பட்டது. தற்போது, இதில் 55 நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலம் 31,645 நபர்கள் நேரடியாகவும், 1,00,000 நபர்கள் மறைமுகமாகவும் பயன் பெற்று வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பெரிய அளவில் தொழிற்சாலைகள் ஏதுமில்லாத நிலையில், மேற்குறிப்பிட்ட சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்பட்டதன் விளைவாக, செய்யார் மற்றும் வெம்பாக்கம் ஆகிய வட்டங்களை சேர்ந்த அதிக அளவிலான மக்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். குறிப்பாக, பல கிராமங்களைச் சார்ந்த அடித்தட்டு மக்களுக்கும், மகளிருக்கும் அதிக அளவில் வேலை வாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இத்தொழிற்பூங்கா அமைக்கப்பட்டதன் காரணமாக, இப்பகுதியைச் சேர்ந்தவர்களின் குடும்பங்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெற்று வாழ்ந்து வருகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட சிப்காட் தொழிற்பூங்கா வெற்றிகரமாக செயல்பட்டதன் விளைவாகவும், இப்பகுதியில் சிப்காட் விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று பெருமளவிலான பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையிலும், சிப்காட் பகுதி–3 தொழிற்பூங்காவினை அமைக்கும் பொருட்டு, உரிய ஆணைகள் தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்டன. இதில் செய்யாறு வட்டத்தில், மேல்மா மற்றும் அதனைச் சுற்றியுள்ள 8 கிராமங்களில் உள்ள 3,174 ஏக்கர் அளவிற்கு நிலஎடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. நில எடுப்பு செய்ய உத்தேசித்துள்ள 3,174 ஏக்கர் பரப்பில், 7 ஏக்கர் மட்டுமே நஞ்சை நிலமாகும்.

தற்போது, 1,200 ஏக்கர் அளவிற்கு நிலஎடுப்பிற்கான அறிவிப்பு மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது. இதில் நஞ்சை நிலம் ஏதுமில்லை. மேலும், அறிவிப்பு கடிதம் அளிக்கப்பட்டதில், நில எடுப்பு செய்ய உத்தேசித்துள்ள, 1881 நில உரிமையாளர்களில், 239 நில உரிமையாளர்கள் மட்டுமே ஆட்சேபணை மனுக்களை அளித்துள்ளனர். சிப்காட் விரிவாக்கத்தின் மூலம் இப்பகுதியில் தொழில் வளர்ச்சி பெருகுவதோடு, அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி ஏற்படும் என்ற நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நிலையில், செய்யாறு வட்டம், மேல்மா கிராமத்தில் உள்ள பட்டா நிலத்தில். தேத்துறை கிராமத்தை சேர்ந்த மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் பச்சையப்பன் என்பவர் தலைமையில், தென்னங்கீற்று கொட்டகை அமைத்து, கடந்த 02.07.2023–ஆம் தேதி முதல் தினசரி சுமார் 15 முதல் 20 நபர்களை கொண்டு தொடர் காத்திருப்பு போராட்டம் நடத்தி வந்தனர்.

அரசு அதிகாரிகளை பணி செய்யவிடாமல் தடுத்தது, அடிக்கடி சாலை மறியலில் ஈடுபட்டு பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தது, நில எடுப்பு செய்ய தானாக முன்வந்து சம்மதம் தெரிவித்த பொதுமக்களைத் தடுத்து நிறுத்தியது, பணி செய்த காவலர்களை தாக்கியது, பொது உடமைகளை சேதப்படுத்தியது உள்ளிட்ட பல்வேறு சட்ட விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டதன் காரணமாக, கடந்த 04.11.2023 அன்று மேல்மா சிப்காட் விவசாயிகள் எதிர்ப்பு இயக்க நிர்வாகி கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த அருள் மற்றும் 19 நபர்கள் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டனர்.

இதில் ஏற்கெனவே அதிக வழக்குகளில் தொடர்புடைய, அருள் மற்றும் 6 நபர்களை திருவண்ணா மலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பரிந்துரையின் பேரில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரால் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

செய்யாறு சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு இந்த நில எடுப்பு வருவதால், குண்டர் சட்டத்தின் கீழ் கைதான பச்சையப்பன், தேவன், சோழன், திருமால், மாசிலாமணி மற்றும் பாக்கியராஜ் ஆகியோரின் குடும்பத்தினர் செய்யாறு சட்டமன்ற உறுப்பினரை நேற்று முன்தினம் (17–11–2023) நேரில் சந்தித்து, மேற்படி நபர்களை விடுவிக்க கோரிக்கை வைத்தனர். மாலை, கைது செய்யப்பட்ட நபர்களின் குடும்ப உறுப்பினர்கள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினருடன் வந்து, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, தங்களது கோரிக்கை மனுவை அளித்தனர்.

இவர்கள் அளித்த மனுக்களில், வருங்காலங்களில் இது போன்று அரசு திட்டங்களைக் காரணமில்லாமல் எதிர்க்கமாட்டோம் என்றும், இத்தகைய தவறுகளை வெளியாட்களின் தூண்டுதலின் பேரில் செய்துவிட்டோம் என்றும், இனி வருங்காலங்களில் இதுபோன்ற தவறுகளைச் செய்யமாட்டோம் என்றும் தெரிவித்து, தங்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக குண்டர் சட்டத்தில் கைதுசெய்யப்பட்டு சிறையில் இருக்கும் தங்கள் குடும்ப உறுப்பினர்களை விடுவிக்குமாறும் கோரிக்கை வைத்தனர். பொதுப்பணித் துறை அமைச்சர், அவர்களின் கோரிக்கை மனுக்களை முதலமைச்சர் அவர்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செய்யாறு சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டு, சட்டம்–ஒழுங்கிற்கு குந்தகம் விளைவித்து, பொதுச்சொத்திற்கு சேதம் விளைவித்ததன் காரணமாக, குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள பச்சையப்பன், தேவன், சோழன், திருமால், மாசிலாமணி மற்றும் பாக்கியராஜ் ஆகியோர் குடும்பத்தினரின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலனை செய்து, அவர்களை குண்டர் தடுப்புச் சட்ட நடவடிக்கையிலிருந்து விடுவிக்க ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், மேற்குறிப்பிட்டுள்ள 6 நபர்களின் மேல் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த குண்டர் தடுப்புச் சட்ட ஆணை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

### பா.ஜ.க. ஆட்சியில் பொருளாதாரம் தலைகீழாக உள்ளது!

# சர்வதேச விவகாரங்களை கூறி தப்பிக்க நினைக்கிறார் மோடி!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

*சென்னை, நவ. 19-*

*மோடி ஆட்சியில் உள்நாட்டு உற்பத்தியிலும் தோல்வி வெளிநாட்டு ஏற்றுமதியிலும் தோல்வி. கேள்வி எழுப்பினால் சர்வதேச விவகாரங்களை கூறி தப்பிக்க நினைக்கின்றார் என ‘தீக்கதிர்’ நாளேடு விமர்சித்துள்ளது.*

*அது வருமாறு:-*

*பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தத்தைச் சரிசெய்ய ஒன்றிய அரசு சுயசார்பு இந்தியா திட்டத்தை அறிவித்தது. 20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டத்தில் சிறுகுறு நடுத்தர நிறுவனங்களுக்கு பிணையம் இல்லாமல் கடன் வழங்க 3 லட்சம் கோடி ரூபாய் வரை ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் 45 லட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயனடையும் என்று கூறப்பட்டது. ஆனால் நிலைமை மேலும் மோசமானதுதான் மிச்சம். உள்நாட்டு நிலைமை இப்படி இருக்க நாட்டின் வெளி நாட்டு வர்த்தக நிலையோ இதைவிட மோசமாக உள்ளது.*

*இறக்குமதி 12.3 விழுக்காடு அதிகரித்துள்ள நிலையில் ஏற்றுமதி 6.2விழுக்காடு மட்டுமே உயர்ந்துள்ளது. அக்டோபர் மாதத்தில் இந்தியா வின் வர்த்தக பற்றாக் குறையில் மிகப்பெரிய இடைவெளி ஏற்பட்டுள்ளது. வர்த்தகப் பற்றாக் குறை கடந்த மாதம் 31.46 பில்லியன் டாலர்களாக அதிகரித்தது. இது எதிர்பார்ப்பை விட 20.50 பில்லியன் டாலர்கள் தான் அதிகம் என்று அரசு ஆதரவு பொருளாதார நிபுணர்கள் கூறினாலும் நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமாக உள்ளதே உண்மை.*

*கடந்த ஆண்டு அக்டோபரில் சரக்கு ஏற்றுமதி 31.60 பில்லியன் டாலர் என்ற அளவில் இருந்தது. இந்தாண்டு அதே அக்டோபர் மாதம் சரக்கு ஏற்று மதி 33.57 பில்லியன் டாலராக இருந்தது. அதாவது கடந்*



தீக்கதிர்

2023 நவம்பர் 18 சனிக்கிழமை

அதிகரித்து வரும் வர்த்தக பற்றாக்குறை

பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தத்தைச் சரிசெய்ய ஒன்றிய அரசு சுயசார்பு இந்தியா திட்டத்தை அறிவித்தது. 20 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டத்தில் சிறுகுறு நடுத்தர நிறுவனங்களுக்கு பிணையம் இல்லாமல் கடன் வழங்க 3 லட்சம் கோடி ரூபாய் வரை ஒதுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதனால் 45 லட்சம் சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் பயனடையும் என்று கூறப்பட்டது. ஆனால் நிலைமை மேலும் மோசமானதுதான் மிச்சம். உள்நாட்டு

*தாண்டைவிட வெறும் 2பில்லியன் டாலர் கள் தான் அதிகம். இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாட்டிற்கு இது ஒரு சாதனை அளவல்ல. சரக்கு பொருட்கள் இறக்குமதியுடன் ஒப்பிடும் போது ஏற்றுமதி அளவு மிகமிகக் குறைவே. கடந்த நிதியாண்டில், சீனாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி சுமார் 28விழுக்காடு குறைந்து 15.32 பில்லியன் டாலராக இருந்தது. அதே நேரத்தில் சீனாவில் இருந்து இறக்குமதி கடந்த நிதியாண்டில் 4.16விழுக்காடு அதி கரித்து 98.51 பில்லியன் டாலராக இருந்தது. இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தக இடைவெளி தொடர்ந்து அதிகரித்து வருகிறது.*

*அரசாங்கத் தரவுகளின் படியே கடந்த மாதம் நாட்டின் இறக்குமதி 65.03 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது. அமெரிக்கா, சீனாவில் இருந்து பெருமளவு இறக்குமதி அதி கரித்துள்ள நிலையில் ஏற்றுமதி ஏன் அதிகரிக்க வில்லை என்று ஊடகங்கள் கேள்வி எழுப்பினால் சர்வதேச விவகாரங்களைக் கூறி அரசு தப்பிக்க முயற்சிக்கிறது.*

*மொத்தத்தில் உள்நாட்டில் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிப்போம் என்ற முழக்கமும் எடுபடவில்லை. வெளி நாட்டு ஏற்றுமதியை அதிகரிப்போம் என்ற முழக்கமும் எடுபடவில்லை.*

*இவ்வாறு ‘தீக்கதிர்’ பிரதமர் மோடியின் நிர்வாகத்தை விமர்சித்துள்ளது.*

### இதுவரை ரூ.5 கோடியே 87 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் மருத்துவம் - உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டுவருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகைவழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 5 கோடியே 87 லட்சத்து 90 ஆயிரம்.** இந்தமாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவ உதவி நிதியாக மொத்தம் 8 பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/ –** (இரண்டு லட்சம்) 17.11.2023 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்து போகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது..

### நிதி உதவி பெறுவோர் விவரம்


| | | |
|---|---|---|
| 1. | எஸ்.வேதரெத்தினம்,<br>மடப்புரம், தீவாம்பாள்புரம் அஞ்சல், திருவாரூர் | - 25,000/- |
| 2. | கே.அருள்மணி,<br>12வது வார்டு, உப்பிலியல் தெரு, பரமத்தி வேலூர், நாமக்கல் | - 25,000/- |
| 3. | கே.ஆறுமுகம்,<br>நரியாப்பட்டு கிராமம் அஞ்சல், திருவண்ணாமலை | - 25,000/- |
| 4. | ஆர். நாராயணன்,<br>அங்காளயம்மன் கோவில் தெரு, எடப்பாடி, சேலம் | - 25,000/- |
| 5. | எம். பாப்பம்மாள்,<br>சஞ்சய்காந்தி காலனி, எம்.ஜி.ஆர்.நகர், சென்னை–78 | - 25,000/- |
| 6. | ஏ.கணேசன்,<br>சேவூர் ஒன்றியம், ஆலத்தூர் வடக்கு, திருப்பூர் மாவட்டம் | - 25,000/- |
| 7. | 7.டி.ரங்கசாமி,<br>பாரதி நகர், கட்டபெட்டு, கோத்தகிரி, நீலகிரி மாவட்டம். | - 25,000/- |
| 8. | எஸ்.அழகர்,<br>13வது வார்டு, பி.மீனாட்சிபுரம், போடி, தேனி மாவட்டம். | - 25,000/- |
| | **மொத்தம்** | **ரூ. 2,00,000/-** |



இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ஒன்றியம் பாராஞ்சி பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கழக கொடியை ஏற்றி, கல்வெட்டினை திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் அரக்கோணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் ஆ.சவுந்தர், மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம், துரைமஸ்தான் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் எஸ்.எம்.நாகராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் அ.அசோகன், நெமிலி ஒன்றிய குழு தலைவர் பெ.வடிவேலு அரக்கோணம் ஒன்றிய குழு தலைவர் நிர்மலா சவுந்தர், ஒன்றியச் செயலாளர் எஸ்.ஜி.சி. பெருமாள், ஒச்சேரி பாலாஜி, தக்கோலம் பேரூர் செயலாளர் எஸ்.நாகராஜன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் ஒன்றியம் குருவராஜப்பேட்டையில் ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்துக் கட்டிடத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி திறந்து வைத்தார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் துரை மஸ்தான், சிவானந்தம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் அ.அசோகன், மு.கண்ணையன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, அரக்கோணம் ஒன்றியக்குழு தலைவர் நிர்மலா சவுந்தர், நெமிலி ஒன்றியக் குழு தலைவர் பெ.வடிவேலு, ஒன்றிய செயலாளர்கள் ஆ.சவுந்தர், எஸ்.ஜி.சி.பெருமாள், பாலாஜி தெய்வசிகாமணி, பேரூர் செயலாளர் எஸ்.நாகராஜன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அம்பிகாபாபு, சுந்தராம்பாள், பெருமாள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




புதுடெல்லி பிரகதி மைதானத்தில், 42வது இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில் உள்ள திறந்தவெளி கலையரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு நாள் விழாவை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (17.11.2023) தொடங்கி வைத்து, தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறை கலைஞர்களால் நடத்தப்பட்ட கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டார். உடன் புதுதில்லி தமிழ்நாடு இல்லத்தின் முதன்மை உள்ளுறை ஆணையர் ஆசிஷ் சாட்டர்ஜி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

### வாக்காளர் சேர்த்தல், நீக்கம், திருத்தம் செய்ய சிறப்பு முகாம்!

# கடலூர் கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பணியினை சிறப்பாக செய்திடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர்,நவ.19-

கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி, இந்திய தேர்தல் ஆணையம் வருகின்ற 01.01.2024ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு தமிழகத்திலுள்ள வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் செய்திட புகைப் படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலைத் தேர்தல் ஆணையம் 27.10.2023 அன்று வெளியிட்டுள்ளது. கடலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும், 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. வருகிற 25.11.2023 (சனிக்கிழமை), 26.11.2023 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 வரை சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

அதன்படி, இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன் வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது விவரங்களை சரி பார்த்து, விடுபட்ட வாக்காளர்களும், இடம் மாறிய வாக்காளர்களும், 1.1.2024 அன்று 18 வயது நிரம்பக் கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை



சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று, பூர்த்தி செய்து, அந்தப் படிவங்களை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

இதனடிப்படையில் 2024ஆம் ஆண்டு ஜனவரி 1ந் தேதி 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், வாக்காளர் பட்டியலில் இதுவரை இடம் பெறாத பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ள வாக்களர்களின் பெயர்களையும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போதுள்ள பட்டியலில் இருந்து நீக்கவும், தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தலுக்கு படிவம் 6லும், பெயர் நீக்கம் செய்திட படிவம் 7லும், வாக்காளர் விபரங்களில் உள்ள தவறுகளை திருத்தம் செய்திட, ஒரே சட்டமன்றத் தொகுதிக்குள் திருத்தம், முகவரி மாற்றம், நகல் வாக்காளர் அடையாள அட்டை பெற (Replacement Id Card) படிவம் 8லும், அயல்நாடு வாழ் வாக்காளர் சேர்க்க (NRI Voters) படிவம் 6ஏ, ஆதார் எண் வாக்காளர் அடையாள அட்டையுடன் இணைக்க படிவம் 6பி, விண்ணப்பம் பூர்த்தி செய்து அளித்திட வேண்டும். மேலும் வாக்கு சேர்ப்பதற்கு www.nvsp.in. மற்றும் www.voterportal.eci.gov.in என்ற இணைய தளத்திலும் விண்ணப்பிக்கலாம். இதுவரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படாதவர்கள் மற்றும் இடம் மாறி வந்து வாக்காளர்களாக சேர்க்க விரும்புபவர்களும், பெயர் சேர்த்துக் கொள்ள வேண்டிய விண்ணப்படிவமான படிவம் 6ஐ முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும். குறிப்பாக படிவம்6ன் கலம் IVல் மனுதாரரது முந்தைய முகவரியினை தவறாது எழுதிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

1.வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

2.பெயர்களைச் சேர்க்க / நீக்க / திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09.12.2023 வரை

3. சிறப்பு முகாம் நடத்தப்படும் நாட்கள் 25.11.2023 (சனி) 26.11.2023 (ஞாயிறு)

4. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 05.01.2024

மேலும் மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும், கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநகர மேயர், நகர, பேரூராட்சி, ஊராட்சிமன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலைக்குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc) மற்றும் கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும் இந்த பணியின் விவரத்தினை மாவட்ட கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு: வாக்காளர் சேர்க்கும் பணியின்போது நமது கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள BLA2க்கள் மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (blc) இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்ற தேர்தல் வரை, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLOஉடன் இருந்து கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஆளுநர் விவகாரம்: சட்டப் பேரவை சிறப்புக் கூட்டம்!

# ஜனநாயக வழியில் இடைவிடாது போராடி சாதிக்கும் முதல்வர்!

## 'தினகரன்' தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, நவ. 19-

ஆளுநர் போடும் முட்டுக் கட்டைகளுக்கெல்லாம் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஜனநாயக வழியில் இடைவிடாது போராடி சாதித்துக் காட்டுவார் எனவும் ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கும் வேறு வழியே இல்லாமல் ஆளுநர்ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார் என மேற்கோள் காட்டி 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

குதிரைக்கு கடிவாளம் போடுவதுபோல், தமிழ்நாடு அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மீது, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்நிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி 10க்கும் மேற்பட்ட நிலுவையில் உள்ள மசோதாக்களை நேற்று முன்தினம் மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார். அவர் திருப்பி அனுப்பியுள்ள மசோதாக்களில் பெரும்பாலானவை பல்கலைக்கழகங்கள் தொடர்பானவை.



தினகரன்

நவம்பர் 18, 2023 சனிக்கிழமை

வழிகாட்டி

குதிரைக்கு கடிவாளம் போடுவதுபோல், தமிழ்நாடு அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொண்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மீது, தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனு உச்சநீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. இந்நிலையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி 10-க்கும் மேற்பட்ட நிலுவையில் உள்ள மசோதாக்களை நேற்று முன்தினம் மீண்டும் தமிழ்நாடு அரசுக்கு திருப்பி அனுப்பியுள்ளார். அவர் திருப்பி அனுப்பியுள்ள மசோதாக்களில் பெரும்பாலானவை பல்கலைக்கழகங்கள் தொடர்பானவை.

சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பான மசோதா, மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதா, வேளாண் பல்கலைக்கழக திருத்த மசோதா, சென்னை பல்கலைக்கழக திருத்த மசோதா, சட்டப்பல்கலைக்கழகத் திருத்த மசோதா, அன்னை தெரசா பல்கலைக்கழக திருத்த மசோதா, மீன்வளம், கால்நடை பல்கலைக்கழக திருத்த மசோதா, தமிழ் பல்கலைக்கழக திருத்த மசோதா, அண்ணாமலை பல்கலைக்கழக திருத்த மசோதா, பல்கலைக்கழக வேந்தராக முதலமைச்சரே செயல்பட வகை செய்யும் மசோதா ஆகியவை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நீட் விலக்கு மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பியதுபோலவே, ஆளுநர் ஆர்.என். ரவி திருப்பி அனுப்பியுள்ள 10 மசோதாக்களையும் மீண்டும் நிறைவேற்றி அவருக்கே அனுப்பிவைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகத் தான் இன்று சட்டமன்ற சிறப்புக்கூட்டம் நடைபெறுகிறது. மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதா மீது முடிவெடுக்க அரசியலமைப்பின் 200-வது விதியின்படி ஆளுநருக்கு 3 வாய்ப்புகள் உள்ளன. முதலாவதாக - மசோதா சரியாக இருந்தால் ஒப்புதல் தரலாம். இரண்டாவது - மசோதா சரியில்லை என்றால் நிறுத்திவைக்கலாம். அது, கிட்டத்தட்ட நிராகரிப்பதாகவே அர்த்தம். மூன்றாவது - மசோதா மீதான முடிவு எடுக்க குடியரசு தலைவருக்கு அதை அனுப்பி வைக்கலாம். மூன்றாவது வாய்ப்புக்கான காரணம் - மத்திய அரசு இயற்...

சித்த மருத்துவ பல்கலைக்கழகம் அமைப்பது தொடர்பான மசோதா, மருத்துவ பல்கலைக்கழக திருத்த மசோதா, வேளாண் பல்கலைக்கழக திருத்த மசோதா, சென்னை பல்கலைக்கழக திருத்த மசோதா, சட்டப் பல்கலைக்கழகத் திருத்த மசோதா, அன்னை தெரசா பல்கலைக்கழக திருத்த மசோதா, மீன்வளம், கால்நடை பல்கலைக் கழக திருத்த மசோதா, தமிழ் பல்கலைக்கழக திருத்த மசோதா, அண்ணாமலை பல்கலைக்கழக திருத்த மசோதா, பல்கலைக்கழக வேந்தராக முதலமைச்சரே செயல்பட வகை செய்யும் மசோதா ஆகியவை திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. நீட் விலக்கு மசோதாவை மீண்டும் நிறைவேற்றி அனுப்பியது போலவே, ஆளுநர் ஆர்.என்.ரவி திருப்பி அனுப்பியுள்ள 10 மசோதாக்களையும் மீண்டும் நிறைவேற்றி அவருக்கே அனுப்பி வைக்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

அதற்காகத்தான் இன்று சட்டமன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறுகிறது. மாநில சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாமீது முடிவெடுக்க அரசியலமைப்பின் 200வது விதியின்படி ஆளுநருக்கு 3 வாய்ப்புகள் உள்ளன. முதலாவதாக - மசோதா சரியாக இருந்தால் ஒப்புதல் தரலாம். இரண்டாவது - மசோதா சரியில்லை என்றால் நிறுத்திவைக்கலாம். அது, கிட்டத்தட்ட நிராகரிப்பதாகவே அர்த்தம். மூன்றாவது - மசோதா மீதான முடிவு எடுக்க குடியரசு தலைவருக்கு அதை அனுப்பி வைக்கலாம். மூன்றாவது வாய்ப்புக்கான காரணம் - மத்திய அரசு இயற்றியுள்ள சட்டத்திற்கு இணையாக ஒரு மசோதா சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டு இருந்தால் அது குறித்த முடிவை தான் எடுக்காமல் அதை இறுதி செய்வது குடியரசு தலைவர் என்பதால் அதை அவரது பார்வைக்கு அனுப்பி வைக்கலாம்.

இவை தவிர, 2 விதமான மசோதாவை ஆளுநரால் நிறுத்திவைக்க முடியாது. ஒன்று - அன்றாட செலவினம் தொடர்பான பண மசோதா. இரண்டாவது - சட்டப்பேரவை அதன் வரம்புக்கு உட்படாத மசோதாவை நிறைவேற்றி யதாக ஆளுநர் கருதினால், தமது கருத்துக்களுடன் அந்த மசோதாவை சபாநாயகருக்கு திருப்பி அனுப்பலாம். அந்த மசோதா மறுபரிசீலனை செய்யப்பட்டு விவாதிக்கப்பட்டு மீண்டும் ஆளுநரின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டால், அதற்கு ஆளுநர் ஒப்புதல் தந்தாக வேண்டும். அப்படித்தான் ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு, வேறு வழியே இல்லாமல் ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார்.

ஒரு மாநில சட்டசபையில் 2வதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு ஆளுநர் ஒப்புதல் அளித்தே ஆகவேண்டும் என்பதை உணர்ந்த ஆர்.என்.ரவி, ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். இது, ஜனநாயக நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாநில அரசு நடத்திய மகத்தான ஜனநாயக போராட்டத்துக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி ஆகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு, ஜனநாயக வழியில் இடைவிடாது போராடினால் சாதிக்க முடியும் என்பதை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு நிரூபித்து காட்டியிருக்கிறது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்று 10 மசோதாக்களுக்காக தமிழ்நாடு சட்டப்பேரவை சிறப்பு கூட்டம் நடக்கிறது. இது, மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக உள்ளது.

இவ்வாறு 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வரை பாராட்டியுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஆரணி ஏ.செல்வரசு**

**நவம்பர் 19 (2015)**



**பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின்மீது கொண்ட தீவிரப் பற்றினால், கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மிதிவண்டியில் கிராமந்தோறும் சென்று, கொள்கைகளை பரப்பி கழகத்தை வளர்த்தவர்.**

**ஆரணி நகரச் செயலாளராக தொடங்கி, ஒருங்கிணைந்த வடார்காடு மாவட்டக் கழகச் செயலாளராக 1986 முதல் 1996 வரை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் முதன்மைத் தொண்டராக திகழ்ந்தவர்**

**கழகம் அறிவித்த போராட்டங்கள் அனைத்தையும் முன்னெடுத்து சென்று நடத்தியதோடு, தாமும் அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சேலம் இளைஞர் அணி மாநாடு - மாநில உரிமை மீட்பு!

# இராமநாதபுரத்தில் இரு சக்கர வாகனப் பேரணி!

## மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் வேண்டுகோள்!

இராமநாதபுரம், நவ. 19-

இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா ராமலிங்கம் எம்.எல்.ஏ. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி "நீட் விலக்கு நம் இலக்கு" மற்றும் மாநில உரிமை மீட்பு இளைஞர் அணி 2வது மாநில மாநாடு முன்னிட்டு "இருசக்கர வாகனப் பிரச்சார பேரணி" கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி தமிழ்நாட்டில் 234 தொகுதிகளிலும் பேரணி வலம் வருகின்றது. நமது இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 20.11.2023 திங்கள் கிழமை அன்று விருதுநகர் மாவட்டம் திருச்சுழியில் இருந்து புறப்பட்டு நண்பகல் பார்த்திபனூர், பரமக்குடி பாம்பூர் வழியாக முதுகுளத்தூர் சென்று பிறகு தேரிருவேலி,



உத்திரகோசமங்கை வழியாக இராமநாதபுரம் வந்தடைகிறது. மீண்டும் 21.11.2023 செவ்வாய்கிழமை அன்று காலை இராமநாதபுரத்தில் இருந்து புறப்பட்டு இராமேஸ்வரம், தனுஷ்கோடி சென்று மீண்டும் திருச்சி தேசிய நெடுஞ்சாலை தேவிபட்டினம், ஆர்.எஸ்.மங்கலம், திருவாடனை வழியாக காரைக்குடி நோக்கி செல்கிறது. ஆகவே ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக இளைஞர் அணியினர் உள்ளிட்ட கழக தோழர்கள் இருசக்கர வாகனப் பிரச்சார பேரணிக்கான ஏற்பாடுகள், தெருமுனை பிரச்சார கூட்டங்கள் ஏற்பாடுகள் செய்திடுமாறும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், உள்ளிட்ட கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நீட் தேர்வு விலக்கு கோரியும், இளைஞர் அணி 2வதுமாநில மாநாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இருசக்கர வாகன பேரணி வேலூர் மாவட்டம் காட்பாடி சித்தூர் பஸ் நிலையம் வந்தது. அவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் வரவேற்று பேரணியில் கலந்து கொண்டார். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ராஜ மார்த்தாண்டன், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் ரவிக்குமார், துணை அமைப்பாளர் முரளி பாஸ்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.11.2023) தாய்லாந்தில் 01.12.2023 முதல் 09.12.2023 வரை நடைபெறவுள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான உலகத்திறன் விளையாட்டுப் போட்டியில் (IWAS THAILAND) தமிழ்நாட்டின் சார்பில் கலந்து கொள்ளவுள்ள 24 மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளுக்கு போட்டி நுழைவுக் கட்டணம், விமானக்கட்டணம் உள்ளிட்ட செலவினங்களுக்கு உதவித்தொகையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.38.40 இலட்சத்திற்கான காசோலைகளை சென்னை முகாம் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, விளையாட்டு அமைப்புகளின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 87–வது நினைவு நாளையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று (18.11.2023) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் துறை உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர்

# தே.மதியழகன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழா வரவேற்பு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை வகித்து சிறப்புரை!

### அமைச்சர்கள் துரைமுருகன் - உதயநிதி ஸ்டாலின் - முன்னணியினர் வாழ்த்து!

கிருஷ்ணகிரி, நவ.19-

கிருஷ்ணகிரியில் கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. மகள் திருமண வரவேற்பு விழா நடைபெறுகிறது

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் மகள் ஷிவானி மணமகன் கௌதம் ஆகியோரது திருமணம் கடந்த 1ம் தேதி பெங்களூருவில் நடைபெற்றது. இதனையடுத்து கிருஷ்ணகிரியில்



வரவேற்பு விழா வருகிற 22.11.2023 - புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கிருஷ்ணகிரி சுங்கச்சாவடி அருகே உள்ள கலைஞர் அரங்கில் கழக தலைவரும்,

தமிழக முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது.

இந்த வரவேற்பு விழாவிற்கு கழக பொதுச் செயலாளர் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகிக்கின்றனர். கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சரும் உணவு மற்றும் உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வரவேற்புரை ஆற்ற உள்ளார்

மேலும் அமைச்சர் பெருமக்கள், வாழ்த்துரை வழங்குகின்றனர் .

வரவேற்பு நிகழ்ச்சியில் கழக உயர்நிலை செயல் திட்ட குழு உறுப்பினர்கள், தலைமைக் கழக செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், ஏராளமானோர் கலந்து கொள்கின்றனர் .

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் நன்றியுரை ஆற்றுகிறார்.

### கடலூர் மேற்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சிறப்பு முகாம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ. 19-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, வருகின்ற 2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி அன்று 18 வயது நிறைந்தவர்களின் பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும் நடவடிக்கைகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள் 25.11.2023 - 26.11.2023 தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள மேற்கண்ட அட்டவணையின்படி சிறப்பு முகாம்கள் நடைபெறவிருக்கும் நாட்களில் மாவட்ட, ஒன்றிய, நகர பகுதி, பேரூர், ஊர்க் கிளை, வார்டு கழக செயலாளர் - நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் BLA 2 ஆகியோர் தங்களை முழுமையாக இப்பணியில் ஈடுபடுத்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### வாகை சந்திரசேகர் - விஜயா தாயன்பன் பங்கேற்பு! தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# கலைஞர் நூற்றாண்டு விழா - நாடக விழா!

## அமைச்சர்கள் மற்றும் பீட்டர் அல்போன்ஸ் - பூச்சி முருகன் - முன்னணியினர் பங்கேற்பு!

சென்னை, நவ.19-

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் உலக நாடகத் தினத்தை முன்னிட்டுநாடக விழா 20, 21, 22.11.2023 (திங்கள், செவ்வாய், புதன்) ஆகிய மூன்று தினங்களில் மாலை 6 மணிக்கு, மயிலாப்பூர் பாரதிய வித்யா பவன் அரங்கில் நடைபெறுகின்றது.

மூன்று நாட்கள் நடைபெறும் இவ்விழாவிற்கு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமை வகிக்க, உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன் வரவேற்றுப் பேசுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், கீதா ஜீவன், கயல்விழி செல்வராஜ் ஆகியோர் விழாப் பேருரையாற்றுகின்றனர். மாநில சிறுபான்மையினர் ஆணையர் தலைவர் சா.பீட்டர் அல்போன்ஸ், தமிழ்நாடு விட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.மூன்று நாட்களும் நாடகங்கள் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.






# கலைஞரும் நானும் 45

"**யா**ரைப் பற்றிப் பேசினால் என் நெஞ்சமெல்லாம் நிறையுமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் கண்கள் கலங்குமோ, யாரைப் பற்றிப் பேசினால் என் நாவின் திறன் கூடுமோ அந்தத் தலைவரைப் பற்றிப் பேசுவது என் பேறு" என முத்தமிழறிஞர் கலைஞருடனான நினைவுகளைப் பகிர்கிறார் திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன்.

■ பேராசிரியர் **சுப.வீரபாண்டியன்**



## "என் இரண்டாவது தந்தை..!"

"**நா**ன் சிறுவனாக இருந்தபோதே முத்தமிழறிஞர் கலைஞரை சந்தித்திருக்கிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் எங்கள் இல்லத்துக்கு வந்திருக்கிறார். என் தந்தையார் இராம சுப்பையா - அம்மா விசாலாட்சி இருவரும் சுயமரியாதை இயக்கக் காலத்தில் இருந்தே இயக்கத்தில் இருந்தவர்கள். தி.மு.கழகம் தொடங்கிய முதல் நாளிலிருந்து அப்பா கழகத்தில் இருந்தவர். எனவே, காரைக்குடியில் நிகழ்ச்சிகளுக்கு வருகிற போது அறிஞர் அண்ணா, டாக்டர் கலைஞர் என கழகத் தலைவர்கள் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அதேபோல், பல பொதுக்கூட்டங்களிலும் கலைஞரைப் பார்த்திருக்கிறேன்.

கலைஞரை நேரில் சந்தித்துப் பேசும் வாய்ப்பு அமைந்தது நெருக்கடி நிலை காலத்தில்தான். அதுவரை எம்.ஜி.ஆர் ரசிகனாகவும், ஆதரவாளனாகவும் நான் இருந்தேன். என் நெஞ்சில் இருந்த கதாநாயகன் தீமைகளை எதிர்க்கிறவன். ஆனால், எம்.ஜி.ஆர் நெருக்கடி நிலைக்கு ஆதரவாக இருந்தார். அப்போது கலைஞர் அதை எதிர்த்தார். அதனால், கலைஞர் கதாநாயகனாக உயர்ந்து நின்றார். அந்த நேரத்தில் தலைவர் கலைஞரைச் சந்திக்க அப்பா அழைத்துச் சென்றார். 'என்னுடைய கடைசி மகன்' என அப்பா அறிமுகம் செய்து வைத்தார்.

அந்தக் காலகட்டத்தில்தான் 'முரசொலி' வாங்கும் பழக்கமும் எனக்கு உருவானது. எல்லோரும் 'முரசொலி' வாங்க அச்சப்பட்ட காலத்தில், நான் அதை எல்லோரும் பார்க்கிறமாதிரி கையில் வைத்துக் கொண்டு செல்வேன். அந்த வயதில் கலைஞர் மீது கொண்டிருந்த ஈர்ப்பின் காரணமாக, அரசியல் சாகச மனநிலையாக அதை நினைத்துப் பார்க்கிறேன்.

> **அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார்.**

### 'இனி' தொடக்கமும் வருத்தமும்

பிறகு, நீண்ட இடைவெளி. 1983-ஆம் ஆண்டு ஈழத்தமிழர் ஆதரவு இயக்கங்களில் நான் செயல்படத் தொடங்கினேன். 1987-ஆம் ஆண்டு திலீபன் மரணத்துக்குப் பின்னர், 'ஈழத் தமிழர் உரிமைப் பாதுகாப்புக் கூட்டமைப்பு' என்கிற அமைப்பினை இயக்குநர் வி.சி.குகநாதன், கவிஞர் மு.மேத்தா மற்றும் பல்வேறுபட்ட ஆளுமைகள் இணைந்து உருவாக்கினோம். அதற்கு நான் ஒருங்கிணைப்பாளராக இருந்தேன். அந்த அமைப்பின் மூலம் பல போராட்டங்களை முன்னெடுத்தபோது கலைஞரை சென்று பார்க்கிறோம்.

சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை பயண நிகழ்ச்சி ஒன்றை, கலைஞர் தொடங்கி வைத்தார். அதன் பின்னர், பாரிமுனையில் இருந்து கிண்டி வரை மனிதச் சங்கிலிப் போராட்டத்தை நடத்தினோம். அதையும் கலைஞர்தான் தொடங்கி வைத்தார். அதற்கு அடுத்த நாள் எங்களை அழைத்தவர், தி.மு. கழகத்தின் சார்பில் தமிழ்நாடு முழுவதும் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்த உள்ளதாகக் கூறினார்.

அதன் பின்னர், 1991-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் தேதி, பிரபாகரன் பிறந்த நாளில் **'இனி'** என்கிற பத்திரிகையைத் தொடங்கினோம். அந்த ஏட்டுக்கு **'முரசொலி'**யில் விளம்பரம் கொடுத்தோம். "இது நடுநிலை ஏடு அன்று, எல்லா கடைகளிலும் கிடைக்காது, தமிழ் இன எதிரிகள் இந்த ஏட்டினை வாங்க வேண்டாம்" என அதில் கூறியிருந்தோம். அதைப் பார்த்துவிட்டு தலைவர் கலைஞர் அழைத்தார். "எல்லாமே எதிர்மறை விளம்பரமா இருக்கேப்பா" என்றார். மேலும் "இனி, என்று பெயர் வைத்திருக்கிறீர்களே இது என்ன வினைச்சொல்லா" எனக் கேட்டார். அந்தப் பொருளில் அதுவரை யோசிக்காமல் இருந்தோம். அதன் முதல் இதழ் வந்தபோது, அவர் குறித்து எதிர்மறையாக வந்த கருத்துகளுக்காக என்னை வரவழைத்து, வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்.

### சிறையில் உருவான மனமாற்றம்

அதன் பின்னர் நான் தமிழ் தேசிய அரசியல் செயல்பாடுகளில் என்னை ஈடுபடுத்திக் கொண்டதால், ஏறத்தாழ பதினைந்து ஆண்டுகள் கலைஞர் அவர்களுடன் தூரமாகவே இருந்தேன். இன்னும் சொல்ல போனால் பல மேடைகளில் அவரை விமர்சனமும் செய்திருக்கிறேன். அதையெல்லாம் அவர் பொருட்படுத்தியதே இல்லை.

1991-ஆம் ஆண்டிலிருந்து 2003-ஆம் ஆண்டு வரை எட்டுமுறை ஈழ ஆதரவுக்காக கைது செய்யப்பட்டிருக்கிறேன். 2002-ஆம் ஆண்டில் பொடா சட்டத்தில் கைதாகி, ஒன்றரை ஆண்டுகள் சிறையில் இருந்தேன். அந்த சிறைவாசம்தான் எனக்குள் மாற்றங்களைக் கொண்டு வந்தது. வலுவான அரசியல் இயக்கம் தி.மு.க.தான், என்கிற முடிவுக்கு வந்தேன். அந்த கால கட்டத்தில் பொடா போன்ற சட்டங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பவராக கலைஞர் இருந்ததை மறுக்க முடியாது.

### தந்தையும் மகனுமாக

பிறகு, எனது அரசியல் நிலைப்பாடுகளுக்காக, நான் இருந்த அமைப்புகளில் எதிர்ப்புகள் வந்தன. 2004-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தேன். 2006-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின்போது, தி.மு.க.வுக்கு ஆதரவு நிலை எடுத்து, நான் சார்ந்திருந்த தமிழ் தேசிய அமைப்பில் இருந்து வெளியேறினேன். அப்போது கலைஞரை சந்திக்க ஓர் அழைப்பு வந்தது. "பதினைந்து ஆண்டுகள் அவரை எதிர்த்திருக்கிறேன், அவர் என்ன நினைப்பாரோ" எனத் தயங்கினேன். ஆனால், கலைஞரை சந்திக்கச் செல்லும் அன்று பெருவிருப்பத்துடன் கோபாலபுரம் வீட்டுக்குச் சென்றேன்.

அந்த சந்திப்பின் போது, ஒரு படம் எடுத்துக் கொள்ளலாம் எனப் பேச்சு வந்தபோது தலைவர் கலைஞர் இன்னும் தயாராகவில்லை என அருகில் இருந்தவர்கள் கூறினர். உடனே கலைஞர் "இருக்கட்டும் பரவாயில்ல, உங்க அப்பா இப்படித்தான இருப்பார்" என என்னை அன்பால் நிறைத்து விட்டார். அந்த நிமிடத்தில் இருந்து அவரை என் தந்தையாகவே கருதுகிறேன். அப்போது முதல் கலைஞரும் என்னை மகனைப் போலவே நடத்தினார். அவர் மறைவின்போது என் இரண்டாவது தந்தை இறந்துவிட்டார் என்றே எழுதினேன்.

### காந்தம் இழுத்தத் துகள்!

2006-ஆம் ஆண்டில், நான் தி.மு.க.வுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யப்போகிறேன் என்றதும், எந்தெந்த இடங்கள் எனக் கேட்டுக்கொண்டு, உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். அதேபோல 2009-ஆம் ஆண்டு தேர்தலின்போதும் எனது பயணத் திட்டங்களைக் கேட்டுக் கொண்டு, பிரச்சாரக் கூட்டங்களில் கவனமாகவும், பாதுகாப்பாகவும் இருக்குமாறு அறிவுறுத்தி அனுப்பி வைத்தார்.

அவரைச் சந்தித்த தொடக்கக் காலத்தில் தயக்கமாகவும், போகப் போக இயல்பாகவும் உரையாடல் நடந்தது. வாரத்தில் இரண்டு நாட்களாவது அவரை சந்தித்து விடுவேன். பரபரப்பான நேரமாக இருக்கும். அந்த நேரத்தில் ஏதாவது ஒரு நூல் குறித்து பேச்சு எழுந்து அப்படியே நீண்டுவிடும். இப்படிப் பல நிகழ்வுகள் நடக்கும். சில நேரங்களில் நானும் அண்ணன் துரைமுருகன் அவர்களும் பேசிக்கொண்டிருந்தால், "என்னய்யா நீங்க மட்டும் தனியா பேசிக்கிறீங்க" என்பார். ஒருமுறை எனது திருக்குறள் விளக்கத்தைக் கேட்டு மிக மகிழ்ச்சியோடு சிலாகித்துப் 'புதிய விளக்கம்' எனப் பாராட்டினார்.

2008 -ஆம் ஆண்டு என் அப்பாவின் நூற்றாண்டு விழாவில் அவர் ஆற்றிய உரை என்னை மிகவும் நெகிழவைத்தது. நான் அவரைத் தாக்கிப் பேசிய காலங்களில் என்னை விசாரித்ததுடன், "இராம சுப்பையா அண்ணனின் மகனா என்னைத் தாக்கிப் பேசுவது என அறிந்து என்னால் நம்பவே முடியவில்லை. அதன் பின்னர் அவர் வந்து என்னைச் சந்தித்தபோது காந்தமும் இரும்பும்போல ஒட்டிக்கொண்டோம்" என்றார். நான் அப்போது குறிப்பிட்டேன். "அவர் காந்தம். அவரோடு ஒட்டிக்கொண்ட பல நூறு இரும்புத் துகள்களில் நான் ஒரு துகள்". அந்தச் சொற்கள் ஆண்டுகள் கடந்தும் நிலைக்கும்.

...பகிர்வார்கள்

## புத்தக வடிவில் 'பராசக்தி'




**த**மிழ்த் திரைப்பட உலகத்தைப் புரட்டிப் போட்ட படங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, முத்தமிழறிஞர் கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய 'பராசக்தி'. படம் வெளியாகி 70 ஆண்டுகளுக்குப் பிறகும், இப்போது பார்த்தாலும் பல அதிர்வலைகளை ஏற்படுத்தும். அந்தப் படத்தின் கதாபாத்திரங்கள், திரையில் பேசிய பல விஷயங்களை, பின்னாளில் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் அரசுக் கோப்புகளில் இடம்பிடிக்கச் செய்தார் கலைஞர். அதுதான் அவரது பேனாவின் வலிமை.

அந்தப் படத்தின் வசனங்கள், ஒரு தலைமுறையின் பொன்மொழிகள். திரையில் ஜொலிக்கத் துடித்த பலருக்கு மனப்பாடப் பகுதி. பாடலாசிரியர்கள் நீங்கலாக, திரை எழுத்தாளர்களுக்கு எனத் தனித்த மரியாதையை ஏற்படுத்தித் தந்ததில் கலைஞரின் திரைக்காவியங்களுக்குப் பெரும் பங்குண்டு. ஆண்டாண்டு காலமாகப் பார்த்தும் கேட்டும் ரசித்த அந்த வசனங்களை இப்போது படித்துச் சிலிர்க்கவும் முடியும். ஆம்... 'பராசக்தி' படத்தின் திரைக்கதை, வசனம் தற்போது அழகிய வடிவத்தில் நூலாகி இருக்கிறது. இதனை 'டி-ஸ்டாக்' பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

திரைப்படம் வந்த அந்தக் காலத்திலேயே கதை வசனப் புத்தகமும் வந்தது என்றாலும்கூட, கலைஞரின் சிந்தனைகளும் சாதனைகளும் மிக வேகமாக, பரவலாக எடுத்துச் செல்லப்பட வேண்டிய இந்தக் காலத்தில் இந்தப் புத்தகம் வந்திருப்பது காலத்தின் தேவை!

## :ப்ளாஷ்பேக்



### புகைப்படக்கார உடன்பிறப்பு!



இராமதாஸ்

**மு**த்தமிழறிஞர் கலைஞர், பேராசிரியர் பெருந்தகை, தலைவர் தளபதி ஆகியோரின் பிறந்த நாட்களின்போது அவர்களது இல்லத்துக்கு வந்து வாழ்த்து சொல்ல வருபவர்களைப் புகைப்படம் எடுப்பது ஓர் உடன்பிறப்பாக எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை வழங்கியது. 1986-ஆம் ஆண்டு கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் புகைப்படம் எடுத்துவிட்டு கீழே வந்தபோது தாழ்வாரத்தில் அன்றைய இளைஞர் அணி செயலாளரும் இன்றைய கழகத் தலைவருமான தளபதி அவர்களை சந்திக்க நேர்ந்தது. 'உங்களைக் கட்டிப்பிடித்துப் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று அவரிடம் அனுமதி கேட்டதும் மிகச் சாதாரணமாக ஒப்புக்கொண்டதை, இன்றைக்கு நினைத்தாலும் வியப்பாக இருக்கிறது.

**-ஆ.இராமதாஸ், ஆலந்தூர் தெற்குப் பகுதி, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.


அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள்!

**1938 ஆம் ஆண்டு, இந்தி எதிர்ப்பின் முதல் கட்டப் போராட்டம் பெரியார் தலைமையில் தொடங்கியது. சுயமரியாதை இயக்கம், நீதிக்கட்சி, தனித் தமிழ் இயக்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய இந்தப் போராட்டம் 1940 ஆண்டு வரை நீடித்தது. இரண்டாம் கட்டப் போராட்டம் திராவிடர் கழகம் சார்பாக, பெரியார் தலைமையில் 1948 – 50 ஆண்டுகளுக்கு இடையில் நடைபெற்றது. 1952 ஆம் ஆண்டில் மூன்றாம் கட்டப் போராட்டம், திராவிடர் கழகம், தி.மு.கழகம் ஆகியவை தனித் தனியாக நடத்தின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 304




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131